www.tamilarangam.net



# சஞ்சீவி

மலர்- 11

Chanchive 11 - udgave




MBES
U ASNIERES SUR -
- SEINE : FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சஞ்சீவி

மலர் - 11

கார்த்திகை : 1990.

விலை
10-KR

அட்டைப்படம்: "சௌந்தர்"

அல்லற்படும் மானிடப்
பூங்காவில்,
அவதியுறும் உயிரினங்கள்....

படமொழிக்கம்: "ஜோகான்"

உள்ளடக்கம்:


3. நோக்கு
4. திருக்குறள்
5. கட்டுரை
9. கவிதை
11. சிறுவர் அங்கம்
13. சிறுகதை
20. குறு. எழுத். போட்டி. இல: 10
23. தொடர் நவீனம்
26. பேட்டி
30. Dansk flygtningehjælp...
32. சிறுகதை
38. வாசகர் கடிதங்கள்...
43. கவிதை
44. சிரிக்கச் சிந்திக்க
47. கவிதை
52. கவிதை



சஞ்சீவியின் தொடர்புகளுக்கு:
"CHANCHIVE"
TAMILSK DANSK VENSKABSFORENING
P. BOX: 1205
7500 HOLSTEBRO, DANMARK.

www.tamilarangam.net

# நோக்கு

இன்று வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழ் மக்களினது பேச்சும், சிந்தனையும் எமது தாய் மண்ணைப் பற்றியதாகவேயுள்ளது. அங்கே தொடரும் அசம்பாவிதங்கள் இன்று தமிழ் மண்ணில் (வட பகுதி முழுவதும்) பரவலாக்கப்பட்டு எங்கு, எந்த நிலையில் என்ன நடைபெறும் என்பது ஒவ்வொருவர் மனதிலும் கேள்விக் குறியாகவுள்ளது. அங்கே சொந்த வீடுகள் இருந்தும், வீட்டில் வாழமுடியாமல் தங்கள் சொந்த இடங்களை விட்டு இன்னொரு அன்னிய கிராமங்களுக்கும், நகரங்களுக்குமாக இடம் பெயர்ந்து சொந்த மண்ணிலேயே "அகதிகள்" என்ற நிலையில் பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களோ ஏராளம். குறிப்பாக இலங்கை அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடையால் வட பகுதியில் வாழும் எல்லாப் பொதுமக்களும் அத்தியாவசிய பாவனைப் பொருள்கள் (மா, அரிசி, சீனி, பால்மா, மண்ணெண்ணை, கறண்ட் இது போன்ற) கிடைக்காமல் பல இன்னல்களின் மத்தியில் ஒவ்வொரு நாட்களையும் கழித்து வருகின்றார்கள். இதனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் இளம் சமுதாயமும், குழந்தைகளும் தான்.

டென்மார்க் போன்ற அன்னிய நாடுகளுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்த நாங்கள், சகல வசதிகளோடு இங்கு வாழ்ந்தும் சொந்த மண்ணில் அல்லற்படும் எங்கள் மக்களுக்கு எதுவுமே செய்ய முடியவில்லை என்பது எங்களில் பலர் மனதிற்கு மிகவும் பாரமாகவுள்ளது. நாளைக்கு தமிழ் மக்களுக்கு என்ன அரசியல்

www.tamilarangam.net

த் தீர்வு கிடைக்கும் என்பதைவிட, அந்த இளம் சமுதாயத்தின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றதென்பதே பெரிய கேள்வியாகவுள்ளது.

இந்நிலையில் நாங்கள், இங்கு வளர்ந்து வரும் எமது குழந்தைகளுக்கு பயன்படும் வகையில் சில நல்ல விசயங்களை செய்ய முடிந்தால் மிகவும் பயனுள்ளதாகவிருக்கும். இது பற்றி சஞ்சீவி உங்களைப் பல தடவைகள் கேட்டும் இதில் யாரும் ஆர்வமெடுத்துச் செயற்பட முன்வராமை கவலைக்குரிய ஒன்றாகும். எனவே சஞ்சீவியில் "சிறுவர் அங்கம்" என்னும் பகுதி வெளிவருவது உங்களுக்குத் தெரிந்ததே. (இங்கு இடம் பெயர்ந்து வாழும் ஆசிரியர்கள், அனுபவமுள்ள இன்னும் எங்கள் இனம் தமிழ் சமுதாயத்தின் அக்கறையுள்ள பெரியவர்கள், நண்பர்கள்) இதில் வாசகர்களாகிய நீங்கள் ஆர்வமெடுத்து சிறுவர்களுக்கான கேள்வி பதில், சிறு கதை, போன்ற விசயங்களை சிறுவர்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் எழுதி, எங்களுக்கு அனுப்பி வைத்து ஒத்துழைப்புத் தருமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

சஞ்சீவி

## திருக்குறள் விளக்கவுரை

மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனால் வரும்.

ப-உ :

யார் மாட்டும் - யார் இடத்தும். வெகுளியை - கோபத்தை. மறத்தல் - மறக்கவேண்டும். தீய பிறத்தல் - தீமைகள் தோன்றுதல். அதனால் வரும் - அக் கோபத்தால் வரும்.

(வி-உ)

கோபத்தால் தீமைகள் பல உண்டாகும். அதனால், அதனை மறத்தல் நலம்.

www.tamilarangam.net



# Integrafiom ஆ...? Ensidig integration ஆ....? Assiumiliation ஆ.....?

-விஜே-

இன்று டெனிஷ் சமுதாயத்தில், அகதிகள் பற்றிய கண்ணோட்டத்தில் பரவலாகப் பேசப்படும் விடயங்களில் ஒன்று INTER-GRATION. ஒருவனோ அன்றி ஒருத்தியோ ஓர் புதுச் சூழலுக்கு தாமாக வரும் போது அன்றி தள்ளப்படும் போது அச்சூழலில் வாழ தன்னைப் பழக்கப்படுத்தலும் அச்சூழலுடன் தன்னையும் அவனுடன் அன்றி அவளுடன் அச் சூழலும் இணைவதுவே INTEGRATION குறித்த பொது வரைவிலக்கணமாகக் கொள்ளலாம். [GYLDENDAM: FREMMDORDBOG 1964]

இந்த INTEGRATION பற்றி விரிவாக ஆராயச் செல்லும் போது ENSIDIG INTEGRATION, ASSIUMILIATION என்ற இரண்டு நிகழ்வுகள் முன் தோன்றுகின்றது. மேற்காட்டிய வரைவிலக்கணத்தின் படி ஓர் அகதியும் அவன் வாழ்ந்த சூழலும் சேர்ந்தே ஒன்றுடன் ஒன்று கைகோர்க்க வேண்டும். ஆனால் நிஜத்தில் அவ்வாறு நடைபெறுகின்றதா என்றால் அது கேள்விக் குறிதான். ஓர் அகதி அல்லது அவ்வகதியை சார்ந்த சமுதாயத்தின் பெரும்பாலோர் அச்சமுதாயத்தில் தங்களை இணைக்க முனைவதும் அவர்கள் வாழப் புகுந்த சமுதாயம் தனது நேர்கோட்டில் நின்று இவர்களுடன் ஐக்கியமாகுவது நிகழ்வே ENSIDIG INTERGRATION. இந்த வகையால் அகதிகள் INTEGRATE பண்ணாமல் இருக்கின்றார்கள் எனக் குற்றம் சாட்டும் சமுதாயம் "இப்போ INTEGRATE பண்ணி விட்டார்கள்", என ஒல்ல எழுந்த வாரியாக கூறினும் நாம் அதில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பங்கு கொள்ளவில்லை என்ற உணர்வே இல்லாது இருக்கின்றார்கள். இதனால் ஓர் அகதிக்கு எந்தப் பாரதூரமான இழப்போ நஷ்டமோ ஏற்படவில்லை. இந்த ENSIDIG INTEGRATION இன் அடுத்த படியே ASSIMILIATION ஆகும். தனதும், தனது சமுதாயத்தின் தனித்துவத்தை இழந்து முற்று முழுதாக மற்ற சமுதாயத்தின் பிரதிநிதியாக மாற முற்படல் அந்த சந்தர்ப்பம் ஒருபடியான மாறுதல் இது மனோதத்துவ ரீதியில் மிகவும் ஆபத்தானது. ஒருவனோ அன்றி ஓர் சமுதாயமோ தனது சொந்த வேரையே சாகடிக்க வைக்கும் முயற்சியாகும். அதை உடன் புரியாவிட்டாலும் கால ஓட்டத்தில் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இம்மூன்று பதத்தினூடு டென்மார்க்கில் தஞ்சம் புகுந்த இலங்கைத் தமிழரின் வாழ்க்கை முறை எவ்வாறு அமைந்துள்ளது என இக்கட்டுரையூடு பார்க்க விழைகின்றேன்.

INTEGRATION இன் முக்கிய படிகள்: பாஷை கற்றல், "கலாச்சாரச் சந்திப்பு" புதுச் சமுதாயம் பற்றிய தகவல்கள், "சமுதாயப் பங்களிப்பு," என்பனவாம். இதில் முன்னே நிற்பது பாஷை கற்பது. அதனூடே தான் மற்றைய படிகளை வளர்த்துக் கொள்ள முடியும். கூடவே மொழிகளை பிழையாக விளங்கிக் கொள்ளலிருந்து [FORDOM] இருந்து தவிர்க்க முடியும்.

இலங்கையிலிருந்து வந்தவர்களில் இளைஞர்களுக்கு இருந்த குடும்ப பொருளாதார நெருக்கடிகள் காரணமாக பாஷை கற்றலை இடையில் நிறுத்தி வேலைக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டார்கள். படிக்க விரும்பினும் வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தால் அன்றாட அலுவல்களை கவனிக்கப் போதிய டெனிஸ் மொழியைக் கற்ற போதும் இந்த டென்மார்க்கின் விரிவுபட்ட பல துறைகளில், சுதந்திரமாகவும், இலவசமாகவும் கற்கக்கூடிய பல கல்வி வாய்ப்பினை இழந்தார்கள். குடும்பங்கள் என வந்தவர்களில்

① வேலைக்குச் செல்லவேண்டிய பொருளாதார தேவையின்

www.tamilarangam.net



பொருட்டு இளைஞர்கள் போல் வேலைக்குச் சென்றவர்கள்

② கல்வி கற்க மறுத்ததால் வேலைக்கு கட்டாயம் அனுப்பப்பட்டவர்கள்;

③ காலத்தைக் கடத்துவோம் என டெனிஷ் மொழிப் பாடசாலைக்கு மட்டும் செல்வோர்கள்;

④ டெனிஸ் மொழியுடன் மற்ற துறைகளையும் கற்றோர் எனப் பிரிவுபடுத்தலாம்.

ஆகவே எக்காலகட்டத்திலும் மொழியைக் கற்க நமக்கு நாமே ஏற்படுத்தும் சந்தர்ப்பம் தான் எமது நாளில், மனத்திடத்துடன் வாழவழிவகுக்கும். எம் அடுத்த சந்ததிக்கு சரியான வழியைக் காட்ட முடியும். டென்மார்க்கில் வேலை தேடி வந்து குடியுரிமை பெற்று வாழும் பெரும்பான்மையான துருக்கி இனம் போன்ற நிலை தமிழருக்கு இல்லையாயினும் தமிழரில் ஒரு சிறுபான்மையினருக்கு அப்பயங்கரம் உள்ளது என்பது கண்கூடு. மாறாக சொந்தத்தை கல்வியுடன் நன்கு INTEGRATE பண்ணப்பட்ட பல தமிழர்கள் பல இடங்களில் வாழ்வது மனத்திற்கு மகிழ்ச்சியளிக்கிறது.

கூடியளவு இந்த INTEGRATION எல்லாம் ENSIDIG [ஒருபக்கமானது] ஆகவே உள்ளது. எனினும் அதனால் முன் குறிப்பிட்டபடி எந்த இழப்பும் அவர்களுக்கு இல்லை.

மாறாக எமது சமுதாயத்தில் உள்ள பல போக்குகளில் இருந்து தம்மை அல்லது தம் குழந்தைகளை விடுவிக்க வேண்டிய இளைஞர்களும்; குழந்தைகளும் டெனிஸ் சமுதாயத்தின் பிரதிநிதிகள் போல் வாழப்பழகுவது; நேரடியாக இல்லாது விடினும், மறைமுகமாவது அதை ஒப்புக் அன்றி அதற்கு ஆதரவு தெரிவிப்பது மனோவியல் ரீதியான ஓர் தற்காப்பே. தமது வேர் எங்கே என காலஓட்டத்தில் தேடும் போது கண்டுபிடிக்க முடியாத ஓர் நிலைக்கு

www.tamilarangam.net



இருவர் பஸ் தரிப்பில் நின்று பேசிக் கொண்டிருந்த போது அவ்வழியே சென்ற காகம் ஒன்று ஒருவர் மீது அசுத்தம் செய்து விட்டது. அதற்கு அவர் மிகவும் வருத்தப்பட்டார்.

உடனே மற்றவர் நல்ல வேளை எருமைக்கு பறக்கும் சக்தியை ஆண்டவன் கொடுக்கவில்லையே. என்னிச் சந்தோசப்படுங்கள் என ஆறுதல் படுத்தினார்.

---

தன்னும் பரிதாப நிலையே, அன்றி டெனிஷ் சமுதாயமாக மாற வேண்டும் என்ற வேகத்தில் என்று அவர்கள் இந்த மாறுதலால் அதனால் ஏற்படும் மனத்தாக்கல் அனைத்தும் ஒருவர் தன்னில் தான் நம்பிக்கை இழக்கும், அல்லது மனம் குன்றியவர் என நினைக்கும் ஓர் தப்பு மனநிலைக்கு கொண்டு செல்லும் முயற்சியாகவே அமையும்.

இவர்கள் ஒர்கால் இரு சமுதாயத்துக்கும் அன்னியப்பட்டு நிற்கும் துர்நிலைக்கும் கூட தள்ளப்படுவார்கள்.

ஆகவே INTEGRATION என்பதை தவறாகப் புரிந்து ASSIMILIATION இன் நேரமாக அன்றி மறைமுகமாகவோ இருந்த வேண்டியது மிகக் கட்டாயம். இதைத் தமிழ்க் கலைஞர்களும் பிள்ளைப் பிள்ளைப் பிரச்சினைகளால் இதைப் பற்றிய தமிழ்க் குடும்பங்கள் நமது இடைவெளியை நிரப்ப டெனிஷ் சமுதாயத்தில் நம்மையோ அன்றி பிள்ளைகளையோ ASSIMILIATION செய்து கொள்வது பற்றி மிக எச்சரிக்கையாக இருத்தல் நன்று.

மீண்டும் INTEGRATION பற்றி சரியான பார்வையை கொண்டவர்களின் "தனது <u>தனித்துவத்தை</u> என்றுமே இழக்காத வகையில் மற்ற சமுதாயத்துடன் சேர்ந்து வாழுதல்" என்ற அறிவிக்கைத்தை தீர்மானிக்கும்.

இதை நன்கு புரிந்து எமது தனித்துவத்தில் தோன்றிய படி புதிய சமுதாயத்துடன் கைகூழுக்கக் கொள்ள முடியும்.

www.tamilarangam.net



# மாய்ந்து போவதை விட
# வேறென்ன செய்ய முடியும்?

உலையும் கொதித்துள்ளே தண்ணியும் பொங்குது
உள்ளமும் கொதித்துள்ளே வேதனை பொங்குது
உலைக்காவதுண்டு ஓர் பிடி அரிசியிங்கே – என்
உள்ளத்திற்குண்டோ ஓர் மன அமைதி !

மலையே வரினும் மனம் ஏதும் தளராது
தலையே சுமையென சுமந்த நானின்று – என்
தலையே சுமையென தவிக்கின்றேன் தனிமையில்
விலையேதுமில்லா என் மகன் வரவை எண்ணியே !

வெடிச்சத்தம் கேட்ட போதே விரட்டினேன்
படிதாண்டிச் சென்று பத்திரமாகி விடுவென்று
ஓடிச் சென்றாய் உனக்காரம்மா துணையிங்கே – சொந்த
வீடிருந்தும் விடிவில்லா அகதிகள் நாமிங்கு.

நாளைக்கு என்ன நடக்குமென்று நாமிங்கு கலங்குகிறோம்
வேளைக்கு வேளையிங்கே வெட்டையாடுகிறார்கள் எம்மை
சேலைக்கு இங்கே சித்திரவதை, சிதைகிறது அவள் சின்னவுடல்
சோலையாய் இருந்த நாடு சுடுகாடாய் போனதெப்படி ?

தமிழனாய்ப் பிறந்து தப்பியோடக் காசும் இல்லாது
தமிழ் கூடப் பேசி தமிழன் வாழவும் முடியாது – அவன் !

www.tamilarangam.net



தாய் நாட்டிலேயே நாளும் ஓர் அடிமையாகி
தமிழன் அவன் அழிந்த பின்பு தானா - விடுதலை
கிடைக்குமா?

பயந்து பயந்தேனும் பல நாள் ஆறுதல் சொன்ன - அவனை!
பாய்ந்தே வந்த பாவிகள் படை பிடித்துச் சென்ற போது
காய்ந்து போன என் உடம்பு கண்ணீரை விட்டே
மாய்ந்து போவதை விட வேறென்ன செய்ய முடியும்?

எஸ். பிறேம்
கேர்ணிங்


பின்குறிப்பு:-
தனக்கு கடைசிவரை மகன் துணை இருப்பான் என்று நம்பிக்கையுடன் இருந்த ஓர் அன்னையின் எதிர்பார்ப்பை ராணுவம் முறியடித்து, மகனையும் கைது செய்து சென்ற பின்பு, உலைக்கு தண்ணியை அடுப்பில் வைத்து விட்டு..... மகனை எண்ணி கலங்கும் ஓர் தாயின் உள்ளக் குமுறல்.

---

(1) 25,332 சதுர மைல்
(2) ஒளி. இது ஒரு செக்கனுக்கு 1,86, 86,000 மைல்
(3) பிளெய்ஸ் பாஸ்கல், 1642ம் ஆம் ஆண்டு. பிரான்ஸ்.
(4) கொப்பரா, தேயிலை, இறப்பர்.
(5) 2 தங்க பதக்கம், 1 வெள்ளி பதக்கம், 1 செம்பு பதக்கம்,
(6) சோவியத்யூனியன், 55 தங்க பதக்கம், 31 செம்பு பதக்கம், 46 வெள்ளி பதக்கம், மொத்தம் 132.
(7) 1948 ஆம் ஆண்டு மாசி மாதம் 4ம் திகதி.
(8) 31,536,000. நொடி எடுக்கும்.
(9) ~~வியாழன். (Jupiter)~~ கிறீன்லாந்து
(10) மாணிக்கம், பவழம், வயிரம், மரகதம், வைடூரியம், முத்து, நீலக்கல், கோமேதகம், புஷ்பராகம்,

www.tamilarangam.net





சிறார்களின் நன்மை கருதி உயிரெழுத்துக்கள் அ, ஆ இ, ஈ, உ . . . . முறையே பிரசுரமாகும் என்பதை அறியத் தருகின்றோம்.

தமிழ் எழுத்துக்களை
நீங்களும் எழுதிப் பழகும் முறை.

அ ஆ இ ஈ உ

www.tamilarangam.net



## கேள்வி பதில்.

1. இலங்கையின் பரப்பளவு என்ன?
2. ஒளியா, ஒலியா வேகம் கூடியது?
3. உலகத்திலேயே முதல் முதல் கணக்கிடும் இயந்திரத்தை (Calculator) யார்? எப்போது? எங்கே கண்டு பிடித்தார்?
4. இலங்கையின் முக்கிய ஏற்றுமதி பொருட்கள் எவை?
5. 1988 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் டென்மார்க் எத்தனை பதக்கங்களை பெற்றது?
6. 1988 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் கூடிய பதக்கங்களை பெற்றது நாடு எது? எத்தனை?
7. இலங்கை எப்போது சுதந்திரம் அடைந்தது?
8. பூமி தன்னை தானே சுற்றி சூரியனையும் சுற்றி வர எத்தனை நொடி எடுக்கும்?
9. உலகில் மிகப்பெரிய தீவு எது?
10. நவரத்தினங்கள் எத்தனை? அவை யாவை?

(விடை பக்- 10)

## சூடான விவாதத்தின் பின்பு.

ஒருவர்:- போராட்டம் என்றால் இழப்புக்கள் தவிர்க்க முடியாது.

மற்றவர்:- உதை விடு மச்சான்.... இப்ப உங்கடை குடும்பம் எங்கே ஊரிலேயோ....

ஒருவர்:- ஐயா, அம்மா இந்தியாவிலே பெரியக்கா, அத்தான் கனடாவிலே, தம்பி லண்டனிலே... சின்னக்காவும் அத்தானும், நானும் இங்கே...

மற்றவர்:- அது சரி மச்சான் போராட்டம் என்றால் இழப்புக்கள் தவிர்க்க முடியாதது தான்.

www.tamilarangam.net



அரிசி..... மா.... சீனி..... மண்ணெண்ணெய் ..... மின்சாரம்...

இவைகள் போன்ற அத்தியாவசியப் பாவனைப் பொருட்களை வடக்கிலிருந்து தடை செய்துள்ளது இலங்கை அரசு. தனது மிருகத்தனமான அடக்குமுறையை கட்டவிழ்த்துள்ள இவ்வேளையில் எமது மக்களின் "ஜீவமரணப் போராட்டத்தை" சொல்வதே இச்சிறுகதையின் நோக்கம். வெளித்தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ள இந்நிலையில் இச்சம்பவம் இங்குள்ள எங்களுக்கு கற்பனைக் கதையாகப்படலாம். முடிந்தால் சிந்தியுங்கள் அல்லது சிரியுங்கள்............

# நிகழ் காலம்

—வளவன்—



பையை, அதனுள் பிஸ்கட், பால்மா, மாத்திரை கட்டுத்துணி இதுதான் இன்றைக்கு எமது மக்களின் சொத்துக்கள். பையையைத் தலைக்கு வைத்து உறங்கிய கோகிலத்தின் தூக்கத்தைக் கலைப்பது போல் தலைக்கு மேல் ஓர் சத்தம்.... ஆனால் வழமையாகக் கேட்கும் செல்லடியல்ல, பொம்பர் இரைச்சலும் அல்ல, சத்தத்தைத் தொடர்ந்து காலடிச் சத்தம். ஆனால் பீதியைக் கொடுக்கும் அந்தப் பூட்ஸ் காலடிகளும் அல்ல....... இதை மிக அவதானமாக உணர்ந்தாலும் அருகில் உறங்கிக் கொண்டிருந்த அரவிந்தனை அணைத்துக் கொண்டாள். அவள்

www.tamilarangam.net



முகம் இறுகி வியர்த்து விட்டது. இருந்தாலும் கனகம் இவை-களை முதல்முறை சந்திப்பவள் அல்ல..... அவள் அநுபவிக்காத துன்பங்களா.....! இப்ப மிஞ்சியிருப்பது அரவிந்தனும், தங்-கம்மாவும் தான்.

"என்ன பிள்ளை சத்தம்"---- தங்கம்மா.

"அதைத்தான் நானும் நினைக்கிறேனம்மா".

"ஐயோ ..... குழுக்காலே போவார் வந்திட்டாங்கள்"...... விளக்கத்த வாய் எடுத்த தங்கமாவின் வாயைப் பொத்திய கனகம்

"இல்லை..... அம்மா.... அது.... ஆமி இல்லை"... மெல்லக் குனிந்து மெல்ல அரவிந்தனின் தூக்கத்தைக் கலைக்காமல் எழும்ப நினைத்தவள் தோற்றுவிட்டாள். அரவிந்தன் சேலைத் தொங்கலை பிடித்துக் கொண்டான். அவனைத் தாயிடம் கொடுத்து விட்டு தட்டித்தடவிக் கொண்டு எழும்பியவளின் தலையில் பலமாக இடி-த்துக் கொண்டது பங்கருக்குப் போடப்பட்டிருந்த பனைமரம். அவ-ளுக்கு தலை சுற்றி வலித்தது. தன்னைத் தயார்படுத்திக் கொண்டு பங்கர் வாசலுக்கு வந்தாள். சிலர் கதைப்பது போலும், குண்டுகள் விழும் சத்தமும் காதில் விழுந்தது. அவள் இன்னும் வேகமாக வெளியே வந்தாள். தான் கண்ணயர்ந்து உறங்கியதை உணர்ந்து கொண்டாள்.

"விடிந்து வெளிக்குது... ஆனால் வயிறு வலிக்குது பசியால்"...

"என்ன பிள்ளை பேச்சுக்குரல் கேட்குது" தங்கம்மா இடுப்பில் குழந்தை அரவிந்தனுடன் பங்கர் வாசலில்.

"இல்லையம்மா... கேட்ட சத்தம்... பயப்படுமாப் போல ஒன்று-மில்லை... "பனங்காய்"... அதையும் கள்ளன் காணிமேய்ச்சான் கொண்டு போறான்."

www.tamilarangam.net



தங்கம்மா அடுத்த கணம் தனது வாயைத் திறந்தாள். உள்ளே தமிழின் கெட்ட வார்த்தைகள் அனைத்தும் ஒரு மின்னலாய் வெளி வந்தன. ஆனால் காணிமேஞ்சான் கண்ணில் படாமல் மறைந்து விட்டான்.

"அம்மா.... கத்தாதே அவன் கொண்டு போனது... அவன் வயித்துக்குத் தானே"...

"இல்லையடி இவன் போனகிழமையும் இப்படிச் செய்தவன்.... அடக் கடவுளே... நாங்கள் ஆருக்குள்ளா நம்பிறது. வீடு இருந்தும் வீட்டிலே நிம்மதியாய் நித்திரை கூட கொள்ள முடியாமல் கிடக்கு... இந்த வெளிச்சம் இல்லாமல் பறக்கும் "பொம்பர்" எங்கேயிருந்து வந்து வீசும் எண்டு தெரியவில்லை. பங்கருக்கை படுத்தும் கிடந்தால் பனங்காயைக் கொண்டு போறாங்கள்.

அவளின் பேச்சில் இரக்கம் கொண்டது போல் காற்று சற்று பலமாய் வீசியது. பனங்காய் ஒன்று ஓலையைக் கிழித்துக் கொண்டு சர்...ர்..ர் என மண் நோக்கிப் பயணமானது.

"கடவுளுக்கு கேட்டிட்டுது போலே... ஓடடி.. ஓடடி போய் எடுத்துவா பிள்ளை பனங்காயை"...

"அம்மா எங்கடை காணிக்கே தானே." எனக் கூறியபடி கனகம் நடந்தே சென்றாள்.

பனங்காய் நன்கு பழுத்திருந்தது; வாசனை மூக்கைத் துளைத்தது. அதனைக் கைகளில் ஏந்தியபடி கனகம் அருகில் வரும்வரை பொறுத்திருந்த தங்கம்மா....

"எடி கனகம் இந்த சின்னக் கம்பிவேலியை திரும்பவும் அடித்து விட்டால், கள்ளங்கள் இந்தப்பக்கம் வரமாட்டாங்கள். நான் சொல்லச் சொல்ல கேளாமல் நீயும் தானே சேர்ந்து அறுத்துவிட்டனி.

www.tamilarangam.net



ஒருவர்:- நீ புனைப் பெயரில் எழுதாமல் சொந்தப் பெயரிலே ஏன் எழுதுகின்றாய்...?

மற்றவர்:- பெயராவது சொந்தமாக இருக்கட்டும் என்று தான்.

"அம்மா போனகிழமை பொம்பர் நாலுமணி நேரம் குண்டு போட்டதை இந்தக் கம்பிவேலியை அறுத்துவிட்டதாலேதானே நாங்கள் சுகமாக தப்பி ஓடினம். உயிர் பெரிதென என்றும் போது இது ஒரு சின்ன விசயமனே"...

"ஏடி பிள்ளை என்னர வயித்தையே பார்க்கிறாள்" "உன்னையும் உன்ர கடைக்குட்டி அரவிந்தனையும் தானே கனவிலும் நினைவிலும் எண்ணிச் சாகிறன்."

"இப்படி ஓர் நிலை வரும் என்று அருக்கம்மா தெரியும். கையிலே "செக்" இருந்தும் மாத்தவும் முடியவில்லை.... இவன் தம்பியும் அடிக்கடி கோத அனுப்புறான் . இங்கத்தை நிலை அவனுக்குத் தெரியாது."

"ஏடி பிள்ளை.... அவனுக்கு இதுகள் ஒண்டும் தெரிய வேண்டாம். தனிய இருக்கிற பிள்ளை கண்டபடி யோசிச்சு வருத்தம் வந்திடும்."...

"சரி சரி -- அம்மா -- மாமா ஆஸ்பத்திரியாலே வீட்டை வந்திட்டார். இனி எண்டாலும் ஒருக்கால் போவேன்."

"நானும் பார்க்கிறேன் போனகிழமை செல் விழுந்தது. அவன் போனதிலிருந்து பேயும் அலைக்கழிய நச்சரித்துக் கொண்டிருக்கின்றாய் --- என்ர மனசிலுக்கு பாரமாக வந்ததுக்கு, உவன் தானே காரணம். அது மனுசனும் என்னைவிட்டு போட்டுது. இனி என்னடி இருக்கு!"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"அம்மா.... திரும்பத் திரும்ப உந்தப் பழைய கதையை விடு..."

"ஏதை பழங்கதை அப்ப என்னை மருகன் "தமிழரசு" கட்சியிலே பெரிய ஆள். இவன் உன்ரை மாமன் நேருவாய் காங்கிரசுக்கு நின்று தானே உலக்கையாலே அடிச்சவன்".

"ஐயோ!... என்னை... அம்மா.... தமிழ் அரசு, தமிழ்க் காங்கிரஸ் சண்டைக் காலம் இல்லை.... இப்ப வேறை காலமெல்லோ இப்ப உதுகளைப் பார்க்காதே... மாமா அடிச்சதாலே தான் ஐயாவுக்குப் பாரிச வாதம் என்று சொல்ல முடியாது, அம்மா, ஐயா-வும் போட்டுது... அதுக்குப் பிறகு அவர்கள் இரண்டு [தமிழரசு+ காங்கிரஸ்] பேரும் ஒற்றுமையாகி விட்டார்கள். நீங்கள் தான் இன்னைக்கும் பிடிவாதமாக இருக்கிறியள்"....

கனகம், தங்கம்மா வாக்குவாதம் இன்று ஆரம்பமானதல்ல. கனகம் மாமன் மகனைக் காதலித்து மணம் முடித்ததில் இருந்து நடக்கின்ற ஒன்று. இதை அரவிந்தன் அறியாவிட்டாலும் அம்மா அம்மா... கெலி.. கெலி.. எனக் கத்தினான்.

"அடி கனகம் வாறாங்கள் கொள்ளையிலே போவாங்கள் இவங்களுக்கு இடியும் விழாதாம்." எனக் கத்தியபடி அரவிந்தனுடன் ஓட்டமும் நடையுமாக பங்கரை அடைந்தாள்.

கனகம் பனங்காயை ஒரு கையிலும் மறுகையில் கைப்பை-யுடனும் ஒரு செம்பிலே தண்ணியுங்கொண்டு ஓடி பங்கரை அடைந்-தாள்.

"என்னம்மா வாசலிலே..... உள்ளே நடவன்."

"அடி கனகம் இவள் சிவப்பி உள்ளே இருந்து உறுமுறாள். குட்டி போட்டுள்ளாள் போலே... அதுதான் சனியன் வாய்வச்-சாலும் என்று"......

சிவப்பி எனக் குரல் கொடுத்தபடி இருட்டான பங்கருக்குள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குரல் கொடுத்தபடி சென்றாள். இருந்தாலும் அது விரட்டுவது போல் இடைவிடாது குலைத்தது.

சிவப்பி..... சிவப்பி எனக் கனைக்கும் ஆவேசம் வந்தது போல் கத்தினாள்.

எதைத் தான் உணர்ந்து கொண்டதோ தெரியவில்லை சற்று சாந்தமானது, கனகத்தின் நாய். இருந்தாலும் உறுமல் இலேசாகக் கேட்ட வண்ணம் இருந்தது. அரவிந்தன் தங்கம்மாவுடன் ஒட்டிய-படி எந்தச் சத்தமும் சந்தடியுமின்றி இருந்தான்.

"மேலே நின்று போகிறான் போலே கிபிர் சத்தம் கேட்குது இந்தச் சனியன் அதைத் தொலைக்கவும் போகவிடாதாம்." தங்கம்மா சொல்லி வாய் மூடுவதற்கு முன்னர் நான்கு அஞ்சு குண்டுகள் விழுந்தன. பூமியே அதிர்ந்து நின்றது. அந்த அதிர்வில் மீண்டும் நாய் குலைக்கத் தொடங்கியது.

"எடி சிவப்பி... கிடவடி பேசாமல்"... எனக் கத்தினாள்.

சிலவினாடிகள் போராட்டத்தின்..... நிலைமையை உணர்ந்து கொண்டது போல் சிறிய அழுகையுடன் குலைப்பதை நிறுத்தியது நாய். சிறிது நேர மௌனம்... அதன் பின்பு.

"அம்மா இந்த நாய் கூட தனது உறவுக்காக வளர்த்த எங்கள் மேல் பாசமிருக்குது.... அரசாங்கம் செல்லச் சாமான்களையும் (அரிசி, மா, சீனி மின்சாரம் போன்ற அத்தியாவசியப் பொருட்கள்) தடை செய்து விட்டு, கடலாலும், தரையாலும், ஆகாயமூலமும் எங்கள் மீது இந்தத் தாக்குதல், இதுக்குள்ளால தப்புவம் என்று எண்ணுப்படலே அம்மா...? இந்த நேரமாவது ஆருக்காய் கேப்பாரோ மாமனை... நாங்கள் நாளைக்கு இருப்பம் என்றும் சொல்ல முடியாது."...?

"அவன் செய்த வேலைக்......கு"

www.tamilarangam.net



அம்மா இடையிலை.... அவர் பாவம் எனக்குச் சொல்லி அழுதவர். அவர்கள் தங்கள் (தமிழரசு + காங்கிரஸ்) அரசியல் லாபத்துக்காக ஒன்றாகத் தேர்தலையும் வென்று.... பெற்றும் அதுக்கு முந்தியும் "பழம் பழுத்தால் வௌவால் வரும்" எனத்தானும் சொல்லி விட்டு கொஞ்சக் காலம் இந்தியாவிலேயும் கொழும்பிலேயும் இருக்கிறான்கள். நானும் அக்காவும் தான் இன்னமும் கதைத்தேலாமை இருக்கிறம்."

"அடி கெட்ட பின்பு தானே தெரிஞ்சுது"....

"இல்லை அம்மா இதுதான் உன்ரை மருமகன் இருந்தாலும்.... மாமா இப்படி தனிய கஸ்ரப்படுறதே."...

"அதுதானே கொள்ளையிலை போன இந்தியன் வந்து உன்ரை தாலியையும் அறுத்துப் போட்டான்."— தங்கம்மா.

"அம்மா இப்ப மிஞ்சியுள்ளது மாமாவும் நாங்களும் தானே. அவர் வந்தாலும் நிட்டித்தனலக்கிறாய்"..

"கனகம் நானே தனிய இப்படி உறவில்லாமல் இருக்கின்றேன்"

"அது சரியணை, அப்ப தொடங்கியது இன்னைடைக்கு வரைக்கும் உங்களைப் பிரிச்சு வைச்சிருக்கு. ஆனால் இன்னைடைக்கும் அதே பிரச்சினை சில வித்தியாசமான முறையிலே தொடருது...... முதலிலே நீ மாமாவைப் போய் பாரணை, மனுசன் பாவம்.

மீண்டும் செல்லடி தொடங்கியது இந்த முறை நாய் குலைக்காமல் (காவிக் கால) அமைதியாது. கனகம், தங்கம்மா அரவிந்தன் மூவரும் அடித்தொங்கலுக்குப் போய் சாய்ந்து கொண்டனர்.

"ஒரு பெருமூச்சுடன் என்னடி பெரிய காயமே...? அவனுக்கு."


"அது மாறிவிடும் அம்மா.. எனக்கூறி மௌனமானான்

தொடர்ச்சி-பக்-25.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






சஞ்சீவியின் குறுக்கெழுத்துப் போட்டி இல: 10.
உங்களை அன்புடன் போட்டிக்கு அழைக்கிறது.

சஞ்சீவிக்காக நீங்கள் செய்ய வேண்டியது; கு.எழுத்து வெற்றுக் கட்டங்களை பூர்த்தி செய்வதற்கான கேள்விகள் கீழே தரப்பட்டுள்ளன, அவற்றுக்கான சரியான பதிலை தெரிவு செய்து பூர்த்தி செய்ய வேண்டியதேயாகும்:

<u>கேள்விகள்: இடம் - வலம்.</u>

4. 23: முகத்தின் ஒரு பக்கப் பகுதியையும், அவரில் தாவாரம் இடத்தையும் இது குறிக்கிறது. ஆனால் குழம்பல்.
5. 31: தமிழர்களில் ஒருவர் மற்றவரைச் சந்திக்கும்போது கை-கூப்பி இந்தச் சொல்லைச் சொல்வது கலாச்சாரம்.
6. 19: மதப்பற்றுக்கொண்டு நமது ஆசாபாசங்களைத் துறந்து இறைவனிடத்தில் மோட்சம் பெறுவதற்கு இதனைச் செய்வர். இது சிவனின் பெயராகவுமுள்ளது.
7. 46: இதுவே இன்று கூடியளவிலான நாடுகளில் ஆட்சி செய்கிறது. இது உலோகங்களினாலும் சில-சமயம் மரப்பகுதிகளினாலும் உருவாக்கப்பட்டிருக்கும்.
13. 1: பூமியின் மற்றொரு பெயரான இரண்டெழுத்துச் சொல்.
15. 12: தாவரங்களின் நுனிப்பகுதியினை இப்படிக் கூறுவர்.
16. 29: தமிழ் மரபுப்படி தாயை, பிள்ளைகள் இப்படியே அழைப்பர்.

- 26 -: பெரு நெருப்பிற்கு இதுவே பெயர். இந்தப் படத்தில் ரஜனி நடித்துள்ளார்.

www.tamilarangam.net



32. 34: இது இயற்கையாகவும், உயரமாகவும் அமைந்த கற்றொகுதியாகும். எமது நாட்டில் இதிலிருந்து வரும் நீர் வீழ்ச்சியினைப் பயன்படுத்தி மின்சாரம் பெறுகின்றனர்.

39. 52: திருமணம் செய்யாத இளம் பெண்ணை இப்படி அழைப்பர்.

41. 28: அசைபவற்றை "சக்தி"ப் பொருள் என்றும், அசையாதனவற்றை "—"ப் பொருள் என்றும் கூறுவர்.

44. 48: புவி, உலகம் என்பது போல் இன்னுமோர் பெயர்.

49. 36: உள்ளியின் வைத்தியப் பெயரும், சிறு தாவரங்களின் பெயரும் இதுவே.

50. 42: முன்பு ஆங்கிலேய அளவுத்திட்டப்படி எமது நாட்டில் இந்த முறையிலேயே நீள, அகல, உயரத்தைக் கணக்கிட்டனர்.

## போட்டியின் விபரங்களும் நிபந்தனைகளும்.

1. சஞ்சிகையின் ஆசிரிய, செயற்குழு தவிர்ந்த எவரும் பங்கு கொள்ளலாம்.
2. போட்டியில் பங்கு கொள்பவர் கட்டங்கள் அனைத்தையும், அத்துடன் சரியான முகவரியினையும் தெளிவாக எழுதி இதழின் இறுதிப்பக்கத்தில் உள்ள கட்ட அஞ்சல் பத்திரத்தை பூர்த்தி செய்து 20-12 க்கு முன்னதாக சஞ்சிகைக்கு அனுப்பிவைத்தல். (முகவரி அஞ்சற்பத்திரத்தில் உள்ளது.)
3. இதழின் அசல் பிரதியே ஏற்றுக் கொள்ளப்படும்.
4. போட்டி முடிவுகள் சஞ்சிகையின் நடுவர் குழுவினால் தெரிவதால் மேற்கண்ட விதிமுறைகளுக்கமைவாகவும், சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கட்டங்கள் சீட்டிழுப்பு மூலம் 1ம், 2ம், 3ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறும்.
5. போட்டி சம்பந்தமான நடுவரின் தீர்ப்பே இறுதியானது.
6. சரியான விடையும், பரிசில்கள் பெற்றவர்களின் விபரங்களும் அடுத்து வரும் இதழில் வெளியிடப்படும். பரிசில்கள் உரியவர்களுக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கேள்விகள் : மேலிருந்து கீழ்**

7. 4: ஆரியனின் மறுபெயர்.

7. 10: ஓர் குறிப்பிட்ட நிலப்பரப்பின் "உறுதி"யில் மாற்றமோ அல்லது தொலைந்திருந்தால் அந்நிலத்தை தமக்கென உறுதிப்படுத்த இது வேண்டும்.

13. 12: நெருப்பில்லாத இடத்தில் இது வராதென்பர்.

15. 19: வளிமண்டலத்தில் இது ஏற்படும்போது பல மாற்றங்கள் ஏற்பட்டு சூறாவளியே ஏற்பட ஏதுவாகிறது. ஆனால் இது இங்கு குழம்பியுள்ளது.

குறிப்பு:- கட்டம் "20"ல் உள்ள "யு" என்ற எழுத்து இந்தச் சொல்லுடன் சேரவில்லை.

22. 24: தமிழில்; பாடசாலை அதிபர், உயரதிகாரிக்கு கடிதம் எழுதும்போது அடியவர்கள் மரியாதைக்காக இச் சொல்லை முன்னெழுதியே கடிதத்தை தொடர்வர்.

29. 28: ஆங்கிலேயர்கள் தாயாரைச் செல்லமாக இப்படியே அழைப்பர்.

33. 31: இது உலக மக்களை அரசியல் போன்று ஆட்டிப் படைப்பது. யானைக்கு இது பிடித்தால் பெரும் அழிவுகளைச் செய்யும். குழம்பியுள்ளது.

33. 34: மண்டையோட்டின் உட்பகுதியில் மூளை, மூளையம் இருப்பது போல், மேற்பகுதி மயிரால் சூழப்பட்டு இப்படி அழைக்கப்படுகிறது.

39. 38: ஒரு நாட்டின் எல்லையை சட்டவிரோதமாக "—"த்தல் பெரும் குற்றமாகும்.

44. 40: இந்தியாவில் இருந்த மூப்பெரும் சக்கரவர்த்திகளாக இருந்து நாடுகளை ஆண்ட சேரன், சோழன் போன்று இவனும் ஒருவன்.

50. 46: மார்கழி மாத 3ம் பிறையைக் காண்பது "—" ஆகும்.

தொடர்ச்சி பக்கம் - 56

நம்பிக்கை, நம்பிக்கை, நம்மீதே நம்பிக்கை, மேன்மை பெறுவதற்கான இரகசியம் இதுதான்.

— விவேகானந்தர் —




மோகன்! எட்டாம் வாய்ப் பாட்டைச் சொல்லு"

JACK AND JILL
WENT UP THE HILL
"TO FETCH A PAIL OF
WATER"

நாளைக்கு "JACK AND JILL" தெரியாதவை எல்லாம் முழங்காலில நிக்க வேணும்

"வேற யார் தேவாரம் பாடமாக்காதவை"

"எப்படி ரீச்சர் மகள் படிக்கிறாவோ...?"

"SHE IS VERY CLEVER". "அப்ப தகப்பன் மாதிரி டொக்டர் எண்டு சொல்லிறியள்...." "DEFINITELY"...

"ஒரு காட்டிலை ஒரு நரி வாழ்ந்து வந்ததாம்:......."
"காடு எண்டல் என்ன ரீச்சர்.....?"
"அது தான்ரா..... காடு.....
மரங்கள் நிறைய இருக்கும்"

"அப்ப நரி எண்டால் என்ன ரீச்சர்...?"
நரி...... நரி..... நாய் போல இருக்கும்..........

"அப்ப குலைக்குமா....?"
"இல்லையடா!...... உன்னைவிடும்"

www.tamilarangam.net



உனை எண்டால் என்ன ரீச்சர்?`
சனியன்..... ஏறடா...... வாங்குக்கு மேலை.

நெடுகவும் என்னைக் கேள்விகேட்டுக் குழப்பிக்
கொண்டு— உங்களுக்கு படிப்பிக்க வந்த நேரம் ஆடு
மாடு மேய்ச்சிருக்கலாம்.

நேர்வரி:
இங்கு நடைபெற வேண்டியது.
ஒரு சுகப் பிரசவம்; சத்திர சிகிச்சையல்ல.

வெளிவந்த பாலகன் பள்ளியை நோக்கி ஓட வேண்டும்;
அவனின் மூளை வளரும் பருவமல்ல இது மனம் வளரும்
பருவமே.

ஆனால் என்ன செய்தோம்;

வேலையில்லாத் திண்டாட்டத்தின் ஓர் விழுது
வீட்டுத் தாழ்வாரங்களில் நேர்வரியானது.

இப்போ.

நேர்வரிகளுக்கிடையில் போட்டி.
யார் கூடத் திணிப்பது என்று.

கூடி விளையாட வேண்டிய பருவத்தில்
கூட்டிக் கழித்து, அதன் மூளையைப் பிரித்து....

அப்பப்பா.....

குழந்தையோ திணறியது.
அதனுடன் விடவில்லை,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜக்குடனும் ஜில்லுடனும் மேலே கொண்டு போய்
விழுத்தியடித்து முழங்காலை உடைத்து விட்டோம்"

ஆம்

நேர்வரி அக்காமாரின் மோதலில்
நசுங்கியது என்னமோ குழந்தைகள் தான்

இப்போ;

அது ஒரு நொண்டிக் குழந்தை
நொண்டி நொண்டி
பள்ளி செல்கிறது.

அங்கே காத்திருக்கிறது, ஓர் அக்கினி காண்டம்.

-தொடக்கம்-

19ம் பக்கத் தொடர்ச்சி...

அரவிந்தன் கைகளைச் சுரண்டுவதை உணர்ந்த கனகம் அரவிந்தனுக்குப் பிடிக்கிறது என நினைத்தவள் போல் பிஸ்கட்-டை கைகளில் வைத்தபடி இந்த "வெட்டுக்கோதம்" இல்லை என்றால் எங்கள் நிலை......

முற்றும்.



:- உன் மனைவியை ஏன் விவாகரத்து செய்ய வேண்டும் என்கின்றாய்?




:- கல்யாணம் செய்து கொண்ட காரணத்திற்காக...

www.tamilarangam.net



# SEAS சமுதாய முன்னேற்றக் கழகத் தாருடன் ஓர் சந்திப்பு




தொகுப்பு - முரளி.

எமது கலாச்சார வடிவங்களான "இசை" "நாடகம்" போன்றவற்றைச் செய்து காட்டுவதற்காக அண்மைக் காலத்தில் டென்மார்க்கிற்கு விஜயம் செய்திருந்த "SEAS" சமுதாய முன்னேற்றக் கழகம். என்ற அமைப்பைச் சேர்ந்த திருவாளர்கள் செல்வம், சண்முகம், வீரநாகவன், திருமதி ஜமுனா ஆகியோரை இங்கு சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

இக்குழுவினர் கொல்ஸ்ரப்ரோ நகரம் வந்திருந்த வேளையில் "சஞ்சீவி" நிர்வாக அங்கத்தினர் நமக்கு கிடைத்த ஓய்வு நேரங்களில் அவர்களோடு பலபல விடயங்களைப் பகிர்ந்து கொண்டனர். பகிர்ந்து கொண்ட விடயங்களில் ஒரு சில பகுதிகள் உங்கள் முன்னிலையில்.

திரு செல்வம், திருமதி ஜமுனா ஆகிய இருவரும் அளித்த பதில்கள் மட்டுமே இங்கு தரப்படுகின்றன.

கேள்வி:- நீங்கள் டென்மார்க் நாட்டுக்கு நாடகக் கலைஞர்களாக வருகை தந்துள்ளீர்கள். உங்கள் நாடகமூலம் இந்த நாட்டு மக்களுக்கு எதைச் சொல்ல விரும்புகின்றீர்கள்?

www.tamilarangam.net



பதில்:- எமது சமூகத்திலுள்ள மூட நம்பிக்கைகளினால் ஏற்படும் விளைவுகளையும், தற்போம் மதங்களில் எவ்வளவு மூடநம்பிக்கைகளையும் வைத்திருக்கின்றார்கள் என்பதையும் அவற்றினால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் - எமது சமூகத்திலுள்ள சாதிப்பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள், பொலிஸ் கெடுபிடிகள் போன்ற பல பிரச்சினைகளை தெளிவுபடுத்தவுள்ளோம்.

கேள்வி:- இந்தச் "ரீஸ்" என்ற அமைப்பை ஏற்படுத்தியதற்கு என்ன காரணம் என்று சொல்ல முடியுமா?

பதில்:- முக்கிய காரணம் - இந்தியாவிலே வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள், மலை ஜாதி மக்கள் போன்றோரது வாழ்க்கைமுறைகள், மற்றச் சமூக சாதாரண மக்களின் வாழ்க்கையோடு ஒப்பிடும் போது மிகவும் விசித்திரமாயிருக்கின்றது. அதே வேளை அந்த மக்களுக்கு கிடைக்க வேண்டிய சாதாரண அடிப்படை உரிமைகள் இன்னும் மறுக்கப்பட்டு வருகின்றது. மின்சார வசதிகள், போக்குவரத்து வசதிகள், வீட்டு வசதிகள், செய்து கொடுக்கப்படவில்லை. சாதாரணமான சிறு நடைபாதைப் போகும் பாதைகள் கூட இது வரையிலும் சரிசெய்து கொடுக்கப்படவில்லை. இவற்றைக் கவனத்திற் கொண்ட ஆறு இளைஞர்கள் சேர்ந்து இந்த மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும், அம்மக்களை விழிப்படையச் செய்ய வேண்டும் என நினைத்துத் தான் இந்த அமைப்பை ஆரம்பித்தோம். இன்று இது பெரியளவில் வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

கேள்வி:- எப்படியாக மக்களை ஒருங்கிணைத்து இன்று பெரிய அளவிற்கு வளர்த்துள்ளீர்கள் என்று சொல்ல முடியுமா?

பதில்:- நாம் கிராமம் கிராமமாகச் சென்று பாட்டுக்களைப் பாடி நாடகங்களைச் செய்து காட்டி, அவற்றின் மூலம் பிரச்சனைகளை விளங்கப்படுத்தித் தான் மக்களை ஒன்றிணைத்து வருகின்றோம்.

www.tamilarangam.net



மேற்குறிப்பிட்ட முதல் மூன்று கேள்விகளுக்கும் கழகச் செயலாளர் திரு. செல்வம் அவர்கள் பதிலளித்தார். கீழ்வரும் கேள்விகளுக்கு திருமதி, ஜமுனா அவர்கள் பதிலளித்தார்.

கேள்வி:- நீங்கள் பெண் என்பதால் இந்தியாவில் நடைபெறும், சீதனப் பிரச்சினைகள், மாமி மருமகள் பிரச்சினைகள், உடன்கட்டை ஏறுதல் போன்ற பிரச்சினைகள் பற்றி...?

பதில்:- தமிழ் நாட்டிலே சீதனப் பிரச்சினை – மாமி மருமகள் பிரச்சினை சொல்ல முடியாதளவிற்கு இருக்கின்றது. உடன் கட்டை ஏறுதல் முன்பு இருந்ததாக கேள்விப்பட்டிருக்கின்றோம். தமிழ் நாட்டில் இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. அண்மையில் "மகாராஜா" என்ற ஒரு மாகாணத்தில் ஒரு முஸ்லீம் பெண் உடன்கட்டை ஏறினாள், ஏறினாள் என்பதை விட ஏற்றப்பட்டாள் என்பது தான் பொருத்தம். அதை அந்தச் சமுதாயம் முறையாக ஏற்றுக் கொண்டது. அரசாங்கமோ – சட்டதிட்டங்களோ எந்த ஒரு நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கவில்லை. இது மிகவும் கவலைக்குரிய விடயம்.

சீதனப்பிரச்சினையைப் பொறுத்தவரையில் நகர்ப்புறங்களில் தான் மிகவும் அதிகமாகவும் கொடுமையாகவும் இருந்து வருகின்றது. ஆனால் தற்போது கிராமப் புறங்களில் பெரியளவில் வளர்ந்து வருகின்றது. ஆரம்ப காலங்களில் கிராமத் திருமணங்களில் ஓர் ஆண் மகனுக்கு பத்து பாயும் ஒரு இரும்புப் பெட்டியும் கொடுத்தால் மணந்து கொள்வான். ஆனால் இப்போது சாதாரணமாக தாழ்த்தப்பட்ட தொழிலாளி கூட தனக்கு பத்து கட்டில் வேணும் பீரோ வேணும் நகைகள் கொடுக்கப்பட வேண்டும் என வேண்டுகின்றான்.

சில இடங்களில் திருமணம் முடிந்து குழந்தை குட்டிகளைப் பெற்ற பின்பும் சீதனப்பிரச்சினைக்காக பெண்கள் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள். சில படித்த பெண்கள் விவாகரத்து எடுத்துக் கொள்ளுகின்றார்கள். ஒன்றும் தெரியாத பெண்கள்

www.tamilarangam.net



துப்பாக்கிகளுக்கு அஞ்சாத நான் பத்திரிகைகளைக் கண்டு அஞ்சுகின்றேன்.

– நெப்போலியன்.

மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். எங்களுடைய கிராமத்தில் அண்மைக் காலத்தில் சீதனப் பிரச்சினை காரணமாக ஒரு பெண்ணை கணவன் மாமன் மாமி மூவரும் சேர்ந்து கைகால்களைக் கட்டிப் போட்டு விட்டு வாயினுள் துணியடைத்து விட்டு பெற்றோல் ஊற்றிக் கொளுத்தி சாகடித்துள்ளார்கள். இந்தப் பிரச்சினைக்கு நாங்கள் நேரடியாகவே தலையிட்டிருக்கின்றோம். இப்படியான பல பிரச்சினைகள் நாளாந்தம் மிகவும் சாதாரணமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கேள்வி:- அரபு நாடுகளில் ஓர் ஆண் பெண்ணுக்குச் சீதனம் கொடுத்தே திருமணம் செய்கின்றான். அப்படியான ஓர் நிலை இந்தியாவில் வந்தால் எப்படியிருக்கும்?

பதில்:- வரதட்சணை கொடுப்பது என்பதே பிரச்சினை தான். ஒரு ஆண் பெண்ணுக்கோ அல்லது ஒரு பெண் ஆணுக்கோ என்பதில் ஒன்றுமேயில்லை. திருமணம் என்பது இருவர் சேர்ந்து நல்ல ஓர் புதிய வாழ்க்கையை அமைத்துக் கொள்வது தானே. இதற்கேன் சீதனம்? ஒரு ஆண் மகன் ஒரு பெண்ணிடம் போய் பத்து ரூபாய் கொடுத்திட்டு வந்தால் அவளை எல்லோரும் விபச்சாரி என்கின்றோம். அதையே தான் ஓர் ஆண் செய்து கொண்டிருக்கின்றான். வரதட்சணை என்று சொல்லும் போது தனக்கொரு விலை கொடுத்துத் தான் ஒரு பெண்ணை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வருகின்றான். அப்போது ஒரு விபச்சாரியைத் தான் கூட்டிக் கொண்டு வருகின்றான் என்று அர்த்தம். ஒரு ஆண் ஒரு பெண்ணைவிட எந்த வகையில் உயர்ந்து நிற்கின்றான்.

தொடர்ச்சி-பக்-41

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Dansk Flygtningehjælp

informerer om

KULTURHUSET er åbent for alle flygtninge, indvandrere og danske med tilknytning til Holstebro.
Dansk Flygtningehjælp har åbnet huset i et samarbejde mellem Holstebro Kommune, Tamilsk-Dansk Venskabsforening, Holstebroegnens Indvandrerforening og flere andre.
Huset er åbent hver dag kl 9-18, lørdag -søndag kl 10-17.

CAFE' ALADDIN

Huset har en lille café hvor man kan købe te,kaffe,sodavand og lidt varm mad til billige priser. Caféen styres af Indvandrerforeningen, og som 'køkkenchef' er Inga Andersen ansat på en jobstøtteordning.
Også caféens mønttelefon passes af Indvandrerforeningen.

BUTIK UNIK - VASKERI - FOTOKOPIERING

Huset har også sin egen lille butik, som sælger krydderier ris, linser, frugter på dåse og andre langtidsholdbare fødevarer. Fra butikken sælges også vaskemønter og sæbe til maskinerne i kælderen, og kopier fra husets fotokopimaskine. I butikken, som styres af Tamilsk-Dansk Venskabs forening, er M.C.Loganadan ansat som assistent på par.43.

AVISER - TV - VIDEO - BORDTENNIS - BILLIARD

I caféen kan man hver dag læse nye aviser på tamil, dansk, kurdisk, arabisk og tyrkisk, eller se TV 1 og TV 2.
Butikassisten administrerer nøglen til videomskinen for dem som ønsker at se film, som enten kan lejes i butikken eller medbringes udefra.
Om eftermiddagen er der i husets sal åben for to bordtennisborde og et billiardbord.

UDLÅN - VÆRKSTED - FESTER - RECEPTIONER

Huset har mange ting som kan lånes, både til brug i huset og derhjemme. Man kan låne skrivemaskine, symaskine, boremaskine, værktøj, stige,og stole - hvis man skal have mange gæster. I kælderen er et lille værksted hvor man kan reparere cykler og møbler.

www.tamilarangam.net



# K U L T U R H U S E T
# DANMARKSGADE 10, HOLSTEBRO

Salen bruges ofte til store fester som foreningerne arrangerer, men den kan også lånes til private receptioner og fester. Der er borde,stole og kaffekopper til ca 150 pers.

PROJEKT-UNDERVISNING - "SUS I SKØRTERNE"

I huset arbejder 3 lærere med undervisning af 18 kvinder fra Sri Lanka, Kurdistan og Libanon. Hver dag får de undervisning i dansk af Bodil Lousdal, i syning af Jette Perdersen og i tekstil-tryk og produktion af PernilleKrogh

PROJEKT-UNDERVISNING - "MUSIK FRA RØDDERNE"

Andre 12 elever, tamiler, palæstinensere, kurdere og danskere underviser hinanden, og undervises af gæstelærere hver dag i musik, sang og dans, under ledelse af Ingrid Hvass. Og der undervises i dansk af lærer Helle Sørensen.

TAMILSK DANS

Hver mandag og onsdag undervises et hold tamilske børn og unge samt danske elever af Thiageswary Vasanthakumar i den tamilske klassiske dans.
Læreren er i 1990 kåret til "Årets Flygtningekunstner".

DAGLIG LEDELSE - RÅDGIVNING - HUSMØDE - BESØG UDEFRA

Huset ledes til daglig af Preben Kruse, som gerne hjælper og rådgiver husets foreninger og brugere med praktiske og personlige spørgsmål.
Alle er velkomne med forslag og idéer til nye aktiviteter i huset, som så diskuteres på HUSMØDERNE hver torsdag.
I disse møder deltager forenings-bestyrelses-medlemmer, lærere og de ansatte.
Huset modtager gerne besøg udefra til rundvisning af skoler, institutioner, grupper og enkeltpersoner. Efter aftale kan der laves sær-arrangementer med husets foreninger, etniske grupper eller enkelte af de faste brugere.

TELEFONER

| | |
|---|---|
| CAFE' ALADDIN & BUTIK UNIK | 97 41 19 75 |
| KULTURHUSET, omstilling til: | 97 40 31 97 |

Preben Kruse, "Sus i skørterne" og "Musik fra rødderne"

**KULTURHUSET** fejrer 3 års fødselsdag torsdag 1 november 90.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதுப் பொம்மைகள்



- மீரா -

"எதுக்காக என்னைக் கட்டினியள்?"

இந்த இலையுதிர்காலத்தில் மரங்கள் எல்லாம் இலைகளைக் கொட்டிவிட்டு சூனியம் கவ்வி நிற்பது போலவே அந்தக் கேள்வியின் பின் மூர்த்திக்கும் இந்த இரண்டு நாட்களாக மனதுள் இருள் கவ்வியிருந்தது. பகற்காலம் குறைந்து இருட்காலம் கூடியது போலவே அவனுள்ளும் ஓர் சரிசமமற்ற நிலை.

இரண்டு நாட்களாக அவனாகவே அறையுள் முடங்கிக் கொண்டான். வீட்டில் எச்சாமான் குறைந்தாலும் ஓடிப்-போய் வேண்டி வந்து "இந்தா தேவி" எனக் கொடுத்து விட்டு, பிள்ளைகளிடமும் "அப்பாக்கு படிக்கிற வேலையிருக்கு" எனக்கூறித் தப்பிவிட்டு மீண்டும் மீண்டும் அறையுள் போய் ஒதுங்கிக் கொண்டான்.

தேவிக்குமட்டும் காரணம் தெரியாமலில்லை. தன் வைராக்கியத்தை விட்டுக் கொடுக்காமல் இதற்கும் தனக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல அவளும் காலையில் எழுதல் குளித்தல், உணவாக்கல், உணவு பரிமாறல், வேலைக்குச் செல்லுதல், பிள்ளைகள் உறங்கும் வரை அவர்களுடன் பொழுது போக்கல், தவிரவும் நேரம் இருப்பின் ஓர் படம் போட்டுப் பார்த்தல், ரெலிபோனில் தெரிந்த மற்றைய பெண்களுடன் உரையாடுதல் என டென்மார்க் வாழ்க்கையுள் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்ட மற்றைய பெண்கள் மாதிரியே ஓர் சராசரிப் பெண்ணாக இயங்கினாள். ஆனால் மனதுக்குள் மட்டும் அவரைக் குற்றவாளியாக்கிப் போட்டேன் என்ற பெருமிதமும், இப்போது மனதுள் குமைகிறார் என்ற பரிவிரக்கமும் இருந்தாலும் இரண்டையுமே அவள் வெளிக்காட்டவில்லை.

www.tamilarangam.net



மூர்த்தி மட்டும் அந்த அடுக்குமாடிக்கட்டடத்தின் ஓர் அறையில் பக்கவாட்டாக போடப்பட்டிருந்த தன் சோபா-வில் சாய்ந்தபடி யன்னலினூடு மப்புக்கட்டியிருந்த வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். கூடவே தன்னைப் பொறிகலங்க வைத்த தேவியின் கேள்விக்கான பதிலைத் தேடிக்கொண்டிருந்தான்.

மப்புக் கட்டிய வானத்தில் ஓர் பருத்த முகில்கூட்டம் முக்கி முக்கி அசைந்து கொண்டிருந்தது.

நேற்றைக்கு முன்நாள் சனிக்கிழமையும் இல்லாததால் மப்பும் மந்தாரமாய் இருந்தது. ரகுவையும், ரேவதியையும் தமிழ்வகுப்பிற்கு அனுப்பிவிட்டு ஓய்வாக இருந்தபோது "நாலுவருடமாக ஒரு இடமும் போகேல்லை. இந்த கிறிஸ்மஸ் லீவுக்கு பிள்ளையளையும் கூட்டிக்கொண்டு சிங்கப்-பூருக்கு போவமோப்பா?" எனத் தேவியும் கேட்க, "அதுக்கென்ன... போகலாம் தான். இருக்கிறகாசு போதுமோ", என்ற வழமையான பொருளாதாரத் தயக்கத்தோடு பதில் வந்தது.

நத்தார் விடுமுறைவரையிலான சேமிப்பு, வங்கியில் கடனாக எடுக்கக் கூடிய மொத்ததொகை, விடுமுறைச் சம்பளம் ஆகியவற்றை ஓர் தட்டிலும்; பயணச் செலவு, லொட்ஜ் வாடகை, இடம் சுற்றிப்பார்க்கச் செலவு, தேவிக்கும் ரேவதிக்கும் இரண்டொரு நகைகள், கொஞ்-சம் உடுப்பு, போய் வந்த பின் தெரிந்தவர்களுக்கு அன்பளிப்பாக கொடுக்க சில சிங்கப்பூர்ச் சாமான்கள் என்பனவற்றின் செலவை மற்றத் தட்டிலும் போட்டுப் பார்த்த போது எப்படியும் ஒரு 5,000 கையைக்கடி-க்கவே செய்தது. சரி, தைமாசப் பிள்ளைக்காசு என்று 3த் தவணையாய் மீதி 2ஐயும் கைமாத்தாய் வாங்கிச் சமாளிப்பம் என்ற தேவியின் பிரேரணையுடன் பட்ஜட் மீதான விவாதம் சுமுகமாக நிறைவேறியது.

ஆனால் மூர்த்தி மட்டும் மொத்தச் செலவான 30,000 யையும் மனதுள் 6ஆல் பெருக்கிப் பார்த்துவிட்டு தேவிக்கு தெரியாமல் தனக்குள் மட்டும் ஓர் பெருமூச்சைவிட்டபடி லைபிரறிக்கு பேப்பர் பார்க்க சைக்கிளை எடுத்துக் கொண்டு போனான்.

இப்போ மெல்லிய தூறல் தொடங்கியிருந்தது.

www.tamilarangam.net





சிங்கப்பூருக்கு போவது என்ற
நினைவு மனதுக்கு ஒரு மகிழ்-
ச்சியைக் கொடுத்த போதும்
காசை ஊருக்கு அனுப்பினால்
மூன்று பெண்சகோதரங்களின் குடு-
ம்பங்களும் தாய் சிவபாக்கிய
மும் மகிழ்வார்கள் என்று மூர்
த்தியுள் ஓர் நனவோடை.

ஆனாலும் தேவியின், பிள்ளை
களின் சந்தோசங்களுக்கும்,
தன் கனவோடைக்குமிடையாக
சைக்கிளை ஓட்டியபடி லைபிர
ரிக்கு வந்து சேர்ந்தான்.

மெல்லிய தூறலாக இருந்தது
இப்போ பெரிய மழைத்
துளிகளாக விழத்தொடங்கியது.

வீரகேசரியில் யாழ்ப்பாணம் போர்க்கோலம் பூண்டிருந்தது.
மக்கள் துப்பாக்கிகளுக்கும், பம்பர்களுக்கும் இடையே
பதுங்கு குழிகளுள் பதகழித்துக் கொண்டிருந்தார்கள். பலர்
புலம் பெயர்ந்து கொண்டிருந்தார்கள். எங்கு தப்பி எங்கு
செல்வது?. மக்கள் போகும் வழிகளில் எல்லாம் அபாயம்
காத்தேயிருந்தது.

மூர்த்திக்கு தொடர்ந்து படிக்க மனம் சரியில்லை. வெளியே
பெய்துகொண்டிருந்த மழையையும் பொருட்படுத்தாமல்
சைக்கிளில் ஏறி மிதிக்கத் தொடங்கினான்.

வீட்டை வரத்தான் பிரச்சனை கடிதவடிவத்தில் வந்திருந்தது.

சைக்கிளை முன்புறமாக நிறுத்திவிட்டு நனைந்திருந்த தலையை
ஓர் கையால் வழித்து நெற்றிவழியாக தண்ணீரை சுண்டிவிட்டு
வீட்டுக்குள் நுழைந்த மூர்த்தியை "உங்கடை மூத்தக்கா கடிதம்
போட்டிருக்கிறா", என்ற தேவியின் முன்னிலையிலான தோரணை
யில் அமைந்த தொனி வரவேற்றது. ஊர்ப்பிரச்சனைகளில்
குடும்பங்கள் எப்படியோ என்ற நினைவில் வந்தவருக்கு
கடிதம்வந்தது மகிழ்ச்சியாக இருந்தாலும், "மூத்தமச்சாள்"
எனக் கதைக்கும் தேவி இன்று "உங்கடையக்கா" எனக்
கதைத்தது சிறிது வியப்பைக் கொடுத்தது.

www.tamilarangam.net



தேவி,"உங்கடையக்கா" எனப் பிரிந்து நிற்கு காரணத்தை கடிதத்தில் முதல் பந்தியே மூர்த்திக்கு விளக்கியது. மூத்த சகோதரி மாலதியின் மகளுக்கு வெளிநாடு போகத் தேவையான 3 இலட்சத்தில் மாலதிக்கு சீதனமாக அளித்த வீடு, வளவு, நகைகள் என்பனவற்றின் ஈட்டாலும், அடைவாலும் 2 இலட்சம் தேறியிருந்தாலும் மிகுதி ஓர் இலட்சத்துக்கு தம்பி மூர்த்தியின் கையை எதிர்பார்த்தே கடிதம் வந்திருந்தது.

சிங்கப்பூருக்கு போகத் திட்டமிட்டதில் அரைவாசிப் பணம்.

பளீர்! என ஓர் கிளாஸ் குசினியுள் விழுந்து உடைந்த சத்தம் கேட்டது. இன்னுமோர் பாத்திரம் சரிந்தது போலிருந்தது.

"என்ன அது சத்தம் தேவி"
"அது சனியன் வழுக்கிப் போட்டுது"

வழுக்கியது கிளாஸ் மட்டுமில்லை; அவளின் சந்தோசங்களும் தான் என மூர்த்திக்கு நன்கு தெரியும். அதுக்காக காசு அனுப்பாமலிருக்க முடியாது என்றாலும் ஓர் கதைக்காக "அப்ப மாலதியக்காக்கு என்ன செய்வம்?", எனத் தேவியிடம் கேட்டான்.

எப்போ மூர்த்தி கேட்பான் எனக் காத்திருந்தது போல, அவன் சற்றும் எதிர்பார்க்காத வகையில் அவள் குரல் எள்ளும் கொள்ளும் வெடிக்க குசினியுள் இருந்து புறப்பட்டு வந்தது.

"அப்ப என்ன செய்யுறது, எல்லாத்தையும் அனுப்புங்கோ. நாளைக்கு இரண்டாவது அக்காவின்ரை மகளுக்கு கலியாணம் எண்டு வரும், அதுக்கும் அனுப்புங்கோ. மற்றவாக்கும் இனி இன்னுமொரு தேவை வரும், அதுக்கும் அனுப்புங்கோ. உங்களுக்கு எங்களைப் பற்றியோ, பிள்ளைகளைப் பற்றியோ எந்தக் கவலையுமில்லை. அங்கை இருக்கிற எல்லாரும் உங்களை தெய்வமா கும்பிட்டால் போதும்... என்னை விட குறைஞ்ச சீதனத்திலை கட்டினதுகள் எவ்வளவோ நல்லாய் இருக்குதுகள். நான் தான்...", கோபத்தில் எழுந்த குரல் ஓர் விம்மலுடன் விக்கித் தவித்தது.

கடைசியாக அவள் சொன்னது அவனை ஓர் தரம் உலுக்கியது ஆனாலும் அடக்கிக் கொண்டு கேட்டான்,

www.tamilarangam.net



"அப்ப நான் என்ன செய்யுறது தேவி? எளியவனாய் பிறந்தாலும் இளையவனாய் பிறக்கக் கூடாது என்ற மாதிரி மூண்டு அக்காக்கும் கடைசியாய் நான் வந்தன். எல்லாம் என்ரை பொறுப்பாய் போட்டுது."

"அப்ப ஏன் என்னைக் கட்டினியள்?", குசினியுள் இருந்து வெளியே வந்த மூர்த்திக்கு முன்வால் நின்று அழுத்த திருத்தமாக கேட்டுவிட்டு பீறி வந்த அழுகையை மறைக்க அறையுள் ஓடிப்போய் கட்டிலில் விழுந்தாள். தலையணையை அணைத்தபடியே விசும்பும் சத்தம் தான் மூர்த்திக்கு கேட்டது.

மனத்தை என்ன என்னவோ எல்லாம் போட்டுக் குடைய அவனும் தன் படிக்கும் அறையுள் போய் முடங்கிக் கொண்டான். அறையின் நான்கு ஆயிரம் நின்று நாலாயிரம் தேவியர் ஒரே வேளையில் கேட்டார்கள், "ஏன் என்னைக் கட்டினியள்?". பிள்ளைகள் ரகுவும், ரேவதியும் கூட தம் பிஞ்சுக் குரலால் கேட்டார்கள், "அம்மாவை ஏன் கட்டினியள்".

மூர்த்திக்கு உடம்பெல்லாம் வியர்த்தது. யன்னலை அகலத் திறந்து விட்டு தன்னையே தான் கேட்டுக் கொண்டான், "ஏன் நான் அவளைக் கட்டினேன்?".

இந்த இரண்டு கிழமையும் இதனையே தான் அந்த அறையுள் இருந்து கேட்டுக் கொண்டிருந்தான்.

கடைசி அக்காவின் சீதனத்துக்காக மட்டும் தான் கட்டினேனா? ; இல்லை! பாங்கில் கடனுக்கு இன்னும் முயன்று இருந்திருந்தால் அப்பணத்தை பிரட்டியிருக்க முடியும். எல்லோரும் போல் குடும்பம், பிள்ளையள், வாழ்க்கை என வாழ ஆசைப்பட்டேனா? ; அதுவும் இல்லை! எனக்கென்று எதுவும் இல்லாது-எல்லாம் அம்மா, அக்காவை என நினைந்திருந்த எனக்கு அப்படி எனக்கொரு வாழ்க்கையை அமைக்க வேண்டும் என்ற நினைப்பேயிருக்கவில்லை. சிலர் எண்ணுவது போல என் இளமைச் சூட்டைத் தணித்துக் கொள்வ கொள்வதற்க்காக அவளைக் கட்டினேனா?. நிச்சயமாக இல்லை! காரணம்-ஓர் ஊர் அறிந்த விதவையுடன் யாரும் அறியாத உறவை ஏற்படுத்திக் கொண்டிருந்தவன் தான் நான். அப்போ... எதுக்காக அவளைக் கட்டினேன்?

www.tamilarangam.net



மீண்டும் மனம் தளராத விக்கிரமாதித்தன் என்பது போல எதற்காக கட்டினேன் என்ற கேள்விக்கான பதிலைத் தேடி தோற்ற அவன் எது என்னைக் கட்டி வைத்தது என கேள்வியை திசைமாற்றிய போது ஓர் பதில் கலங்கலாக தெரிந்தது.

சின்ன வயதிலிருந்து அவன் மூர்த்தியாகவே வாழவில்லை. கைம்பெண் சிவபாக்கியத்தின் சாயலிலேயே அவன் வளர்ந்தான்; அச்சில் போட்டு அழுத்தெடுக்கும் சீமென்ற் போல.

"கோயிலுக்குப் போ". போனான்.
"படத்துக்குப் போகாதே". போகவில்லை.
"எஞ்சினியருக்குப் படி". படித்தான் - பாஸ் ஆகவில்லை.
"ஜெ.ரி.ஓ. செய்". செய்தான் - பாஸ் ஆகினான்.
"நான் இல்லாத காலத்திலும் அக்காக்களுக்கு நீ தான் தாய், தகப்பன் போல இருக்க வேண்டும்". "ஓம்" என்றான்.

மூத்த இரண்டு தமக்கைகளுக்கும் அவனாக பணம் பிரட்டி கரையேற்றிய போது ஊரே அவனைப் புகழ்ந்தது. சிவபாக்கியத்தின் கலிதீர்க்க வந்த தெய்வம் என பாராட்டியது. சிவபாக்கியத்தின் கண்கள் ஆனந்தத்தால் கலங்கியது. யாருக்கும் தெரியாமல் துடைத்துக் கொண்டாள்.

மூன்றாவது சகோதரிக்கு ஓர் நல்ல இடம் வந்தபோது கையைக் கொஞ்சம் கடித்தது. வங்கியில் பெரிய கடன் எடுக்க உத்தரவாதி கையெழுத்துப் போட ஆள் தேடிக்கொண்டிருந்த போதுதான் தேவி வீட்டார் சம்மதம், தாமே வீடு தேடி வந்தது. அம்மா தான் பெண் பார்க்கப் புறப்பட்டாள். தேவி அழகாகத் தான் இருந்தாள். "ஓர் நல்ல பிள்ளை என்கிறது. உடனே செய்", என அம்மா சொன்னாள். அவன் சொற்கேட்டு நடந்தான்.



தொடர்ச்சி பக்- 49

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கடிதங்கள்

அன்புரிமையுடன் "சஞ்சீவிக்கு;

நான் உன் இதழ்களை மெதுவாக பிரிக்கும் போது அவை உதிர்ந்து விடப்பார்க்கின்றதே..... வர... வர உன் மீது எனக்கு நம்பிக்கையில்லாமல் போய் விட்டது. உன் இதழ்கள் முழுமையாக உதிர்ந்து மனித நேய மலர் மடிந்து விடுமோ என என் மனதில் ஒரு நினைப்பு! கவலை!! அன்று 30 நாட்களில் பிறந்த நீ- இன்று 45 நாட்களில் தான் பிறப்பேன் என்று அடம் பிடிப்பது நியாயம் தானா? இது முறை-யா? இது தகுமா?

உன் இதழில் (மலர் 10) இரு இதழ்கள் "DEN RIGT-IGE KULTUR" இது டெனிஸ் மொழி உருவில், ஏன் தமிழாக்கம் செய்ய வில்லை என்று உன்னை நான் கேட்கமாட்டேன், ஆனால் 10 வருடத்துக்கு மேலாக வாழும் வெளி நாட்டவர்கள் பலர் இந்த மொழியைப் பேசமுடியாமல் தவிக்கும் போது 5 வருடத்துக்குள் வந்த நாங்கள் இதை சரியான முறையில் முழுவதையும் படித்து அறிந்து கொள்-வோம் என்று நீ நினைத்தால்....

நன்றி.

இரா- கருணாகரன்.
FARUM

---

கனம் சஞ்சீவி ஆசிரியர் குழுவிற்கு,

சஞ்சீவி 10 வது மலர் கிடைக்கப் பெற்றேன். நன்றி,

www.tamilarangam.net



நான் அனுப்பியிருந்த கவிதை "முளையூன்றுமோ" பிரசுரிக்கப்பட்டிருந்தது.

ஒரு படைப்பாளியின் ஆக்கம் அது. சித்திரம், கவிதை, கட்டுரை, சிறுகுறிப்பு எதுவாயிருப்பினும் அது அதை ஆக்குவோனின் ஆத்மாவின் ஏக்கம், அனுபவம் அல்லது கருத்து வெளிப்பாடு ஆகும். மற்ற எவருக்கும் அது வெளியிடப்படும் போது விமர்சனம் செய்யும் உரிமையுண்டு. ஆக்கம் தரமற்றது என பிரசுரிப்பவர்கள் கருதினால் பிரசுரம் செய்யாது திருப்பி அனுப்பமுடியும். மாற்றுதல், வெட்டுதல், பிரித்தல், புகுத்துதல் ஆக்குனோரின் ஆத்மாவையே சிதைப்பது போன்றது.

பிரசுரிக்கப்பட்ட கவிதை அனுப்பப்பட்ட மூலக்கவிதையிலுன்றும் பல்வேறு மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டுள்ளது. சில சொற்கள் வசனங்கள் மாற்றப்பட்டு, சொற்புணர்ச்சிகள் பிரிக்கப்பட்டும், வேறு தனிச் சொற்கள் புணரப்பட்டும் வெளியிடப்பட்டுள்ளது. கவிதை இலக்கணம் காலத்திற்கு காலம் மாறுபட்டுக் கொண்டே வந்துள்ளது. இலக்கணங்கள், மரபுகள், விதிகள் ஆதியவற்றிலிருந்து சுதந்திரம் பெற்றவையே புதுக்கவிதை வடிவங்கள். எந்த விதிமுறையின் அடிப்படையில் உங்கள் திருத்தங்கள் செய்யப்பட்டன.

எதிர் காலத்தில் இவ்வாறான சிதைவுகள் நிகழாது புதிய படைப்பாளிகளை ஊக்குவிப்பீர்கள் என நம்புகிறேன்.

அன்புடன்
செவேகன்
-Tranbjerg-

---

அன்புடன் சஞ்சீவி (கடிதங்கள் பகுதிக்கு)

www.tamilarangam.net



திருவாளர் ரகு (HOISTBRO) அவர்கட்கு. தங்கள் ஆதங்கத்தை மலர் 10 மூலம் கண்டு கொண்டேன். அதற்கு காரணம். "யாதி சுமக்கும் இளங்கன்றுகள்" கதையின் கருவை நீங்கள் தவறாக புரிந்து கொண்டது தான், இது தான் கரு என நான் இங்கே விளக்க முற்படின் அது ஆசிரியர் தன்னைச் சோம்பேறியாக்கும் முயற்சியாகும். ஆகவே மீண்டும் கதையுள் தேடுங்கள். கருவை கண்டு கொள்வீர்கள்.

இரண்டாவது தங்கள் வாதம் பிரச்சாரம் செய்கிறேன் என்பதும் எப்போதும் 'நான் உட்பட்ட எனது தமிழ்ச் சமூகத்தின் மீதான எனது பார்வைகளே எனது படைப்புக்கள்' ஆகும். மிகச் சாதாரண உணர்வுகள் கொண்ட என்னால் ஜீரணிக்க முடியாத சில சமூக அபத்தங்களை வெளியே கொப்பளித்து விடுகின்றேன். இதில் எங்கே ஐயா பிரச்சாரத்தைக் கண்டீர்கள்? வேண்டுமாயின் எனது படைப்புகளில் அருவருப்பு தோன்றும். அந்த அருவருப்பின் உள்ளே ஓர் உண்மை தெரியும்!! தெரிய வேண்டும்!!!

நீங்கள் குறிப்பிட்ட "துடக்கு கழிப்பில்" எங்கே சாதிக்கான பிரச்சாரத்தைக் கண்டீர்கள். "பிறப்பால் தாழ்த்தப் பட்டவன்" என ஒருவனை நினைக்கும் மிக தாழ்ந்த மனம் கொண்ட அந்த உயர் குடிமக்கள் அவனை அழையாமல் இருந்திருக்கலாம்; கதை பிறந்திராது. அழைத்த பின்பு அனைவரையும் ஒரே மாதிரியாய் நடத்தியிருக்கலாம்; அப்போதும் கதை பிறந்திராது. அழைத்த பின்பு (அ)நாகரீகமாய் அவமானப் படுத்திய போது தான் துடக்கை கழித்து வைத்தேன். இது பிரச்சாரமேயல்ல, பிரவாகம் எடுத்த எனதுணர்ச்சிகளின் பிரசவமே. இது போன்ற ஆரோக்கியமான பிரசவங்களுக்கு தொடர்ந்து நான் தாயாகவும் நீங்கள் தாதியாகவும் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் விடை பெறுகின்றேன்.

அன்புடன்
மீரா.

www.tamilarangam.net



அது தெரியாமல் தான் பல ஆண்கள் சீதனம் வாங்கி பெண்களை கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். இதில் ஆணுக்கு வரதட்சனை கொடுப்பதோ அல்லது பெண்ணுக்கு வரதட்சனை கொடுப்பதோ பிரச்சினை தான். ஓர் சந்தோசமான வாழ்க்கையை உருவாக்க முடியாது.

கேள்வி:- ஏறக்குறைய இந்த ஒரு மாதகால டென்மார்க் அனுபவம் பற்றி?

பதில்:- இந்த நாட்டிலே பெண்கள் எவ்வளவோ சுதந்திரமாகவும் சுகமாகவும் திரிகின்றார்கள். ஓர் ஆண் செய்யக்கூடிய சகல வேலைகளையும் ஒரு பெண் இங்கு இலகுவாகச் செய்கின்றாள். ஆனால் எங்களுடைய நாட்டிலே ஒரு பெண் சாதாரணமாக சயிக்கிள் ஓடினால் கூட "என்ன இவள் அவுத்து விட்ட மாடு போல் திரிகின்றாள்" என்று கேலி செய்வார்கள். அதுமட்டுமல்லாமல் ஆண்கள் பல சேர்ந்து வம்புக்கும் வருவார்கள். ஆனால் இங்கே பாருங்களேன் ஒரு பெண் எவ்வளவு சுதந்திரமாக பஸ் ஓட்டுகின்றாள்.

ஆனால் இந்த நாடு எவ்வளவு தான் வளர்ச்சியடைந்தாலும் சில கலாச்சார ரீதியான விடயங்களில் எனக்குப் பிடிக்கவே -யில்லை. ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடைக்கும் அந்தரங்கமான விடயங்கள் இங்கு வீதிகளில் மிருகங்கள் போல் நடந்து கொள்ளுகின்றார்கள். மனிதர்களுக்கும் மிரு -கங்களுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு.

கேள்வி:- நீங்கள் இங்கு எப்படியான உணவுவகைகளைச் சாப்பிட்டீர்கள்.?

பதில்:- நாங்கள் வந்த முதல் பதினைந்து நாட்களும் டெனிஷ் மக்கள் மத்தியில் தான் நிகழ்ச்சிகளை நடாத்தி வந்தோம். அம்மக்கள் டெனிஷ் சாப்பாடுகளைத் தான் தந்தார்கள். எம்மால் திருப்திகரமாகச் சாப்பிட முடியவில்லை. பின்பு தான் தமிழ் மக்கள் மத்தியில் நிகழ்ச்சிகளை நடாத்-

www.tamilarangam.net



-ளோம். எங்களுடைய சாப்பாடுகளை தானே, விருப்பத்தோடு திருப்தி கரமாகச் சாப்பிட்டோம். இன்னும் கொஞ்சக் காலம் இங்கே இருந்தால் டெனிஸ் சாப்பாடுகளையும் விரும்பிச் சாப்பிடலாம்.

கேள்வி:- இங்கு வாழும் தமிழ் மக்கள், தமிழ்க் குழந்தைகளின் எதிர்காலம் பற்றி?

பதில்:- பொதுவாக தமிழ்க்குழந்தைகள் டெனிஸ் மொழியைத் தான் அதிகம் கதைக்கின்றார்கள். ஒரு வேறு மொழியைத் தெரிந்திருப்பது தான் நல்லது. ஆனால் நாம் எந்தளவிற்கு தாய்மொழியை மறக்காமல் இருக்கின்றோம் என்பது தான் பிரச்சினை.

இங்கு வாழும் தமிழ்மக்களில் பலர் எப்பொழுது எம் நாட்டுப் பிரச்சினைகள் முடியும், எப்போ எம் சொந்தப் பூமியிலே படுப்போம் என ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் சிலரோ தங்கள் வாழ்க்கை முறையையும் மாற்றி தாங்கள் தங்கள் கோலங்களையும் மாற்றி நிலையையும் மாற்றி சொந்த நாட்டையே மறந்து வாழ்கின்றார்கள். எப்படியான வாழ்க்கை தான் இங்கு அமைந்தாலும் சொந்த மண்ணின் சீவியம் போல் வருமா...? இவர்களது இந்தத் தன்மைகளை இங்கு பழகும் போது தான் கண்டு கொண்டோம்.

கேள்வி:- இறுதியாக சஞ்சீவி வாசகர்களுக்கும் குறிப்பாக இங்கு வாழும் தமிழ்ப் பெண்களுக்கும் என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

பதில்:- இன்று உலகத்தில் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு பிரச்சினைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரையில் அரசியல் பிரச்சினை- குடிப்பிரச்சினைகள்- சமூகப் பிரச்சினைகள் என்று பெரிய பெரிய பிரச்சினைகளாக வளர்ந்து கொண்டு வருகின்றது. பொதுவாக இங்கு வாழும் தமிழர்களும் இந்தியாவைச் சேர்ந்த

தொடர்ச்சி-பக்-48

www.tamilarangam.net



# அன்புடன் சஞ்சீவிக்கு

வாழ்க நீ சஞ்சீவி
உன்னை
வாழ்த்தி வணங்குவதற்குத்
தோள் கனக்க மாலைகளைத்
தூக்கி வர இயலவில்லை.....!!
இதயமே கனமாகி
இருப்பதால்!

அன்னியர் எங்களை
சுரண்டிய போது
ஆவேசப் பட்டோம்
இப்போது
சொந்த தேசத்தார்...
சுரண்டுகிற போது
சும்மாயிருக்கிறோம் !!!
காரணம்
சொந்தமல்லவா
சுரண்டுகிறது.

உறக்கத்தைக் கலைக்க
நீ செய்த
உபதேசங்கள்
இப்போது .....
தூக்கத்தைக் கெடுக்கும்
தொல்லைகளாய்ப் போயின.

நாகேஸ்
HOBRO

www.tamilarangam.net



சிரிக்கச் சிந்திக்க

# ரெலிபோன்

மாரனி

உண்மையிலே எனக்கு என்னை நினைக்கவே மிகவும் வெட்கமாயிருந்தது. ஏன் நான் இந்த இடத்துக்கு வந்தேன். முக்கியமாக பெரிதாகக் கூட ஒன்றும் இல்லை. எனக்கு ஏன் நான் இப்படி ஓர் எண்ணம் மனதில் வந்ததோ....? நான் மட்டுமென்ன மற்றவர்களை விட விதிவிலக்கானவனா? நானும் சாதரண ஓர் தமிழ் அகதி தானே.

நான் நினைத்தாற் போல் கனஆட்கள் அங்கில்லை. என்னை விட மூன்றோ நாலோ பேர் தான். வேளைக்கு எப்படியும் வீட்டுக்குப் போய் விடலாம் என நினைத்த வண்ணம் அங்கிருந்த தங்குமிடத்திலிருந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொண்டேன்.

"ஐயோ இதெல்லோ வாழ்க்கை.... இங்கை மச்சான் எல்லாம் கிடைக்கின்றது,.... வேறு ஏதாவது வீட்டுக்கு அனுப்பினனியோ? என்ன "ரக்ரரோ".... ஒரு ஐஞ்சாறு முடிஞ்சிருக்குமே.... நீ... பெரிய ஆள் தான் மச்சான்"......

போன்ற தெளிவான வசனங்கள் என் காதில் மிகவும் துல்லியமாக வீழ்ந்தன. அங்கிருந்த ஒரு சில டெனிஸ் பிரயாணிகள் "இவன் யாரோ.... என்ன மொழியிலே கதைக்கின்றான் என்றோ அல்லது ஏன் தான் இவ்வளவு சத்தமாய்க் கதைக்கின்றான் என்றோ அசட்டை கொள்ளாமல் அடுத்து வரவிருக்கும் தங்கள் தங்கள் ரெயிலுக்காகக் காத்திருந்தார்கள்.

www.tamilarangam.net



"தம்பி எவிடம் இருக்கிறது. ஊருக்குப் புதிசு போலக்கிடக்கு ரெமிஜுக்கோ? அல்லது ரெலிபோனுக்கோ...?" என்ற படியே அந்தப் பெரியவர் விசாரித்தார்.

"நானண்ணை ரெலிபோனுக்குத் தான் வந்தனான்." எனப் பதிலளித்தேன்.

"தம்பி நானொருக்கா அவசரமாய்க் கதைக்க வேண்டியிருக்கு நாலு மணிபோல் எடுக்கின்றேன் என்று அப்போதே சொன்னனான், ஒருக்கா கெதியா எடுத்துப் போட்டு விடுறன்..... கனநேரமில்லை... உதிலே கனடாவுக்குத் தான்"... எனச் சொல்லி விட்டு நகர்ந்து போனார்.

"அண்ணே எனக்குப் பிரச்சினை இல்லை, அதிலே நிற்கிற மற்ற ஆட்களையும் கேட்டுப் போட்டுக் கதையுங்கோ" என்றேன்.

அவங்கள் இந்த இடத்துப் பொடியன் தான் நான் கதைக்கின்றேன் எனச் சொல்லி விட்டு அந்தப் பொடியன் நின்ற இடத்தருகே போய் தனது நிலையை எடுத்து விளக்கினார். சிறிது நேரத்தின் பின்

"அது நான் மாஸ்ரர் தான் கதைக்கின்றேன். பொடியனின் தமக்கை தான் உடனே செய்து வைக்க வேணும் போல் ஆசைப்படுகின்றார். என்ன... மற்ற நாடுகளைப் போல் இல்லைத் தானே பெண்மார்... பொடியன் இந்தியா போய்ச் செய்திட்டு வரலாம். பிறகு பிள்ளையும் மூன்று நாலு மாதத்திலே இங்கை வந்திடும். பொடியனும் மற்றதுகளைப் போல் இல்லை சும்மா பெ-ரும் பியர்தான் பாருங்கோ... ஏதோ வேளைக்குத் திருமணத்தை முடிப்பது தான் நல்லது... வேறென்ன" எனச் சொல்லி விட்டு ரெலிபோனைக் கட்பண்ணினார்.

எனக்கு நேரம் போகப் போக ஆத்திரமாகவும் ஆவேசமாகவும் இருந்தது. எப்போ தான் என் முறை வரப் போகுதோ என ஏங்கிக் கொண்டிருந்தேன்.

www.tamilarangam.net



"இந்தாங்கோ தம்பிமாரே யார் முதலில் வந்தனீங்கள் இந்தாங்கோ" என தெலிபோனை நீட்டினார் நான் தான் என முந்தியடித்துக் கொண்டான் ஒருவன்.

"தம்பியவை கனக்கக் கதையாதையுங்கோ ஏதாவது முக்கியமானவற்றை மட்டும் கதையுங்கோ, ஏன் என்டால் எல்லோருக்கும் பயன்பட வேண்டுமல்லே....? இது பொதுத் தெலிபோன் டெலிகொம்காரர் அதிக்கா வேளைக்குத் திருத்திப் போடுவாங்கள்"... எனப் புத்திமதியைச் சொல்லி விட்டு அவ்விடத்தை விட்டு மறைந்து போனார் அந்தப் பெரியவர்.

எனக்கு என்னை நினைக்க நினைக்கவே மிகவும் கோபமாய் வந்தது. மற்றவர்கள் நான் ஏதோ ஒரு வகையில் முக்கியம் என இருந்தால் வந்து கதைக்கின்றார்கள் போல. ஆனால் நான்..... தெலிபோன் பிடித்திருந்தால் எப்படியும் யாரோடும் தாராளமாய் கதைக்கலாம் என்ற விருப்பத்தில் அதுவும் பிரமின் நேரி வந்தேன். சரி ஏதோ இருந்தாலும் வந்தனான் எப்படியும் கதைத்து விட்டுப் போவோம் என்று திடசங்கற்பம் பூண்டேன். இதிலே இருந்தால் கதைக்கேலாது வெட்கப்படாமல் அவர்களோடு வரிசை போல் சேர்ந்து கொள்வது என நினைத்துக் அவர்கள் அருகே ஓர் சிறு புன்னகையோடு போய் நின்றேன்.

"டேய் மச்சான் நான் நேரேல கதைக்கின்றேன். எங்கட கொலனிலே ஆட்களுக்கு வேலை கொடுக்கிறான் களாம், மெய்யோடா...? உங்கே மாதிவரட்டோடா?" என்று கதைக்கத் தொடங்கினான்.

அவனது கதையில் இவன் உள்ளுக்குள் தான் கதைக்கின்றான் என உணர்ந்து கொள்ள முடிந்தது. இவன் ஊருக்குள்ளே கதைப்பதற்கா இவ்வளவு நேரமும் இவன் காத்திருந்தான்.

ஏதோ நல்ல காலம் அவன் அதிக நேரம் கதைக்கவில்லை.

தொடர்ச்சி பக் 53

www.tamilarangam.net



மலர் 10 இல் வெளியான படத்தி-
-ற்கான கவிதை.



# என் ஆவி மீண்டும் உன்னைக் காதலிக்கும்

பாதகியே!
என்னை காதலிக்கிறேன்
என்று சொன்னாயே - பிறகு
ஏன் என்னை வெறுத்தாய்...

என் அருமைக் காதலனே!
உன்னை கை பிடிப்பேன். இல்லையேல்
என்னை இழப்பேன் என்று கூறினாயே..
ஏன் - இன்னொருவனிடம் உன் கற்பையே
இழந்தாய் - ஓ
நான் தவறாக புரிந்து விட்டேன்...
இழப்பேன் என்பதற்கு இப்படியும்
ஒரு பொருள் உண்டல்லவா? தமிழா...

கன்றினை!
இன்றும் நான் உன்னை மதிக்கிறேன்.
ஆனால் - நீயோ என்னை மிதிக்கிறாய்..
நான் மிதி வெடியல்ல.
காதலின் தோல்வியால் - உன்
கால்களையாவது பெயர்த்தெடுக்க
நான் சாதாரண மனிதன்..
உன்னைப்போல் மனதை மாற்றும்
கயமையும் கொண்டவனல்ல நான்!

www.tamilarangam.net



உனக்காக வாழ்கின்றேன்.
உறவுகளை மறந்தேன் – ஆனால்
இன்றும் நான் உனக்காக வாழ்கிறேன்..
உணர்வுகளை இழந்துவிட்டேன்.
இந்த மனிதப்பேய்கள் – என்
கால்களையும், கைகளையும் கட்டிப்
போட்டுவிட்டன – நான் பைத்தியமாம்.
மனிதப்பைத்தியங்கள் சொல்கின்றன – ஆம்
நான் பைத்தியம் – காதல் பைத்தியம்.

...

உண்மைதான் உங்களுக்காக வாழ்கின்றேன் என்றுடன்
இன்னொருவனின் அணைப்பில் மயங்கி.
என்னை நீ யார் என்று கேட்ட
பாதகியின் காதலனல்லவா நான்! – ஆம்
நான் பைத்தியமேதான்.
பைத்திய நிலையிலும் – உன்
நினைவுமட்டும் மேலாகத் தொன்றுகின்றது.
இப்போதெல்லாம் நான் உன் பிரிவினால்..
உறக்கம் வருகிறது – ஆம்
அது மருந்துகளினால் வருகின்றது
அது நிரந்தர உறக்கம்
இந்த உறக்கத்தில் என் உடல் அழிக்கப்படலாம்
ஆனால் – என் ஆவி மீண்டும் உன்னை
காதலிக்கும்.....

– இரா கருணாகரன்
· FARUM.

எம்முடன் இணைந்து எங்கள் பிரச்சினைகளை ஏற்றுக்கொ-
-ண்டு எமக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும் என வேண்டிக்
கொள்ளுகின்றோம். நன்றி.

–: முற்றும் :–

www.tamilarangam.net



இவ்வளவும் கண்முன் முடியபோது, எதிலுமே தான் சம்பந்தப்பட்டிராதது போல ஓர் உணர்வு அவனுள் தோன்றியது. தன் சுயவிருப்பத்தின் பேரில் பிறக்காதது போலவே தன் சுயத்தையும் எவருமே வளர்க்கவும் இல்லை; வளர விடவுமில்லை என்பதை திட்டவட்டமாக கண்டுகொண்டான்.

அவன் தன்னைக் காணவில்லை; சிவபாக்கியத்தைக் கண்டான்; இந்துமதத் தத்துவங்களைக் கண்டான். உண்மையும், போலியும் கலந்த கலாச்சாரப்படிவுகளைக் கண்டான். மூர்த்தி என்கின்ற ஆன்மாவை ஒரு சிறிய அளவில்தான் கண்டு கொள்ளமுடிந்தது.

சாவடியில் கிடந்த ரேவதியின் பொம்மை போல, துணியுள் பஞ்சைப் போட்டு அடை அடையென்று அடைந்து அதற்கு கோட்டும் டையும் கட்டி உலாவ விட்டது போலவே தன் வாழ்வும், தன் சமவயதொத்த பலரின் வாழ்வும் அமைந்தது போலவே அவனுக்குப்பட்டது.

எல்லாவற்றையும் கண்டுகொண்டதாலோ, அறிந்து கொண்டதாலோ இப்போ என்ன பலன்? இனிச் சுயமாகத் தான் வாழமுடியுமா? உறவுகளைத்தான் உதறித்தள்ள முடியுமா? எதற்காகக் கட்டினோம் எனத் தெரியாமல் கட்டியிருந்தாலும் இப்போ கண்டுகொண்ட பின்பு தேவியைத்தான் பிரிய முடியுமா? ரகு, ரேவதியைத்தான் ரோட்டில் விடமுடியுமா?

"நான்" அற்ற நிலையில் தொடங்கிய வாழ்வை "நான்னை" ஆராய்ந்த பின்பு தலைமுழுக்குவது இன்னும் தன்னைச்சரி, தேவியைச்சரி, குழந்தைகளைச்சரி, இன்னமும் தன்னை நம்பியிருக்கும் தாய்-சகோதரிகளின் வாழ்க்கையைச்சரி சிதறடித்துவிடும் என்பதை நன்கு உணர்ந்து கொண்டான்.

எனது வாழ்க்கையின் பாடம் எனக்கு இனி உதவாவிட்டாலும் என் ரகு, ரேவதிக்கு நிச்சயமாக பயன்படும். அவர்களை அவர்களுக்கு தெரிய வளர்க்க வேண்டும். அதுதான் முக்கியம். ஆனால் "என் என்னைக் கட்டினியள்?" என்று கேட்ட தேவிக்கு இந்த தத்துவவிசாரணைகளை இலகுவில் விளக்க முடியாது என்பது மட்டும் அவனுக்கு நன்கு தெரியும்.

அவளுக்கு அவள் வழியில் தான் பதில் கூறவேண்டும் என்ற நினைப்புடன், களைப்பு போக ஒருதடவை நன்கு முகத்தை அலசிக் கழுவி துடைத்தபடி முன்கூடத்துக்கு வந்தான்.

www.tamilarangam.net



தேவி சாண்டிலியனின் கடல்புறா-ராணியுடன் ஒன்றிப்போய் இருந்தாள். அவளைக் குழப்பாமல் வந்து முன் கதிரையில் உட்கார்ந்து அவள் வாசித்து முடிக்கும் வரை காத்திருந்தான். மூர்த்தி வந்தது தெரிந்தும் கதை வாசித்து முடிக்கும் வரையும் அவள் தலை நிமிரவில்லை.



நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

கடைசிப் பக்கம் வரை வாசித்த புத்தகத்தை ஓர் சோம்பல் முறிப்புடன் சோபாவின் ஓர் கரையில் போட்டாள்.

"என்னப்பா தேத்தண்ணி ஏதும் வைக்கட்டா"

"வேண்டாம் தேவி. பிள்ளையள் இப்ப வர சாப்பிடுகிறது தானே. அதுக்கு முதல் உன்னட்டை ஒரு விசயம் கேட்க வேணும். நீ கேட்ட கேள்வியை இரண்டு நாளாய் எனக்குள்ளை போட்டு எல்லாப் பக்கத்தாலையும் யோசித்து பார்த்திட்டன். எனக்கு பதில் கிடைக்கேல்லை. சரி... நான் ஏன் உன்னைக் கட்டினன் என்று எனக்குத் தெரியேல்லை. ஆனால் நீ ஏன் என்னைக் கட்டினனி என்பது உனக்குத் தெரியுமோ?"

சற்றும் எதிர்பாராத இக்கேள்வியால் தேவி சிறிது கலவரப்பட்டுப் போனாள்.

"இது என்ன கேள்வி... அப்பா, அம்மா, அண்ணர் எல்லாரும் நீங்கள் நல்ல ஆள்; கட்டினால் என்னைக் கஷ்டப்படுத்தாமல் நல்லாய் வைச்சிருப்பியள் என்று சொன்னார்கள். நானும் ஓம் என்று சொன்னன்"

"அப்ப நீயாக என்னைக் கட்ட விரும்பேல்லை", இதை அழுத்தியே கேட்டான் மூர்த்தி.

www.tamilarangam.net



"என்ன கேள்வியிது, இரண்டு பிள்ளைகளாய் போய்... அதுகளுக்கும் 5, 7 வயதான பிறகு..."

"நீயும் அதே நிலையிலைதானே என்னை இந்த கேள்வி கேட்டனி. எங்கடை சமுதாயத்திலை எதுவும் தேவி எங்கடை முழு விருப்பத்திலை பெரிசா நடக்கிறேல்லை. அலையிலை அள்ளுப்பட்டுப் போற தேங்காய்மட்டை போலை அனேகம் பேருக்கு வாழ்க்கை அமைஞ்சிருது.

ஆனால் இங்கை வந்த பிறகு நகரிலையும், ரீதியிலும் ஏதோ நிலைச்சிருந்த எத்தனையோ விடயங்களை அக்குவேறு ஆணிவேறாய் பிரித்து ஆராயிறம். குழந்தைகளுக்கு கூட சொல்லிக்குடுக்கிறார்கள். அந்தப் பாதிப்புக்குள்ளை ஆளாகிற எங்களுக்கு சிலவேளை நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை கூட விகற்பமாக தோன்றுவாம். அற்பத்தன-மாய்க் கூட தெரியுதாம். ஆனாலும் எதையும் உதற முடியாது தேவி.

இன்டைக்கு உன்ரை அண்ணர் கூடாவிலை இருக்கிறார். சிலவேளை நாங்கள் பாரில் இருந்த கஷ்டத்திலை உன் அண்ணருக்கு கடிதம் எழுத, அண்ணி அண்ணா மேலை பாய்-ந்து விழுந்தால் அந்த ஆள் எவ்வளவு பாவம்.", பேச்சை இடையில் நிறுத்தி தேவியைப் பார்த்தான்.

தேவியின் கண்கள் வழியே கண்ணீர் ஓடிக்கொண்டிருந்தன.

"என்ன தேவி இது..."
"இல்லை... உங்களை சரியாய் நோகடிச்சுப் போட்டன்", தேவியின் குரல் கம்மியது.

"இல்லைத் தேவி... நீ கேட்ட அந்தக் கேள்வியாலை எனக்கு சில விசயங்கள் தெளிவாயிருக்கு. ரகுவையும், ரேவதியையும் இன்னொரு மூர்த்தியும், தேவியுமாக்காமல் அவர்களாகவே வாழ நாங்கள் தடையாய் இருக்க கூடாது என்பதில் உறுதியாய் இருக்கிறன். அதுக்கு நீயும் உடந்தை-யாய் இருப்பாய் என நம்புறன். மற்றது எங்கடை பயண விடயம்..."

வேண்டாம். எதுவும் சொல்லி என்னைக் கவலைப்படுத்த வேண்டாம். நாங்கள் இருதலாய்ப் போவம். இப்ப பெரிய மச்சானுக்கு காசை அனுப்புங்கோ"

தொடர்ச்சி 59

www.tamilarangam.net



# ஆனால்.. ஒரு வித்தியாசம்

பேபி - HOLSTEBRO

அன்பின் நண்பா....
நாம் பாடித் திரிந்தது......
வசந்த காலங்களின் வர்ணங்களாய்
வடிக்கப் பட்டு விட்டது.

இன்று நாம் அதே....
இரவுகளின் உறவுகளோடு
கதிரையில் அமர்ந்தபடி
அந்த நாட்களை
நினைவுகளாய் நினைத்தபடி
இருக்கின்றோம்.

எம் உறவில் பூத்த
பூக்கள்....
இன்னும் அதே அறையில்
வாசம் பரப்புகின்றது.
ஆனால்... ஒரு வித்தியாசம்
எமது "வசந்த மாளிகை"
வாசம் பரப்பினும்....
அந்த வசந்தம் மட்டும் தான்
விட்டுப் போய் விட்டது!

எமது வரலாற்றில்
அச்சடிக்கப் பட்டவை எல்லாம்
கனவுகளின் சாரம்சம் தான்
நண்பா.....!

கண்ணீர் கூட கானல் ஆகிவிட்ட போதும்
எமது உறவு தான் உண்மையாகிவிட்டது.

www.tamilarangam.net

எமது சஞ்சலங்களின்
சாவுமணி முக்கோணத்தின்
மூன்று பக்கங்களால்
நிறுவப் பட்டது.

இன்று ஒரு பக்கம்
எமது வாழ்வின் வானில்
தேய் பிறை
வளர் பிறை என்பது
நிச்சயமாய் கனவுகள் அல்ல.

உடனே முடித்துவிட்டு விலகி வந்தான். எனக்கு முன்னுக்கு நின்றவன் போய் ரெலிபோனைத் தூக்கினான்.

"அண்ணை நீங்களும் கனநேரம் நிற்கிறியள் போலே உடனே விடுறன்" எனச் சொல்லிவிட்டு நம்பர்களைச் சுழலவிட்டான்.

எனக்கு அளவில்லாத சந்தோசம். எப்படியும் அடுத்தது என்முறை. அவனும் மிகவிரைவில் விடுகின்றேன் எனச் சொன்னது எனக்கு இன்னும் சந்தோசமாகவே இருந்தது.

அவன் கூட வெளிநாட்டிலிருக்கும் யாரோ சொந்தக்காரரோடு கதைப்பது போல் தோன்றியது.

"வேறு என்னக்கா.... இங்கே ஒரே பனியும் குளிரும்தான் வேறு என்ன புதினமாய் ஒன்றுமில்லை. இங்கே வேறை ஆட்கள் நிற்கினம் நாளைக்கு இதே நேரம் எடுக்கின்றேன்" எனச் சொல்லி விட்டு கட் பண்ணினான்.

ஏதோ நீண்ட நேரம் நின்றதற்கு தற்போது பலன் கிடைக்கப் போகின்றது. நான் கதைக்கப் போவதை நினைத்து நினைத்து மனம் ஆனந்தக் கூத்தாடியது. கனடா மாமா, மாமி சினேகிதர்கள், லண்டன் மாமா மாமி, தம்பி... எனது ஆவல் எல்லை கடந்து போனது. முதலில் கனடாவிற்கே கதைப்போம் என நினைத்துக் கொண்டு நம்பர்களைச் சுழற்றத் தொடங்கினேன்.

www.tamilarangam.net



திடீரென என் கையை யாரோ பிடித்து இழுத்தார்கள். என் உடல் ஓர் கணம் படபடவென நடுங்கியது. திரும்பிப் பார்த்தேன் நான்கு வெள்ளைக்காரர்கள் ஈ.ராணோ ஈ.ராங்-கோ பலந்: தினமோ...

இனிமேல் நாங்கள் கதைக்க வேணும் ஒருநாளும் நமிடி ருங்கோ-- எங்களுக்கும் கதைக்க சந்தர்ப்பம் தாருங்கள் என ஆவேசப் பட்டுச் சொன்னான். அவன் மற்றவர்களோடு தங்கள் மொழியில் ஏதேதோ எல்லாம் சொன்னான். மற்-றவர்களும் கோவப்பட்டுக் கொண்டே என் அருகில் நெருங்கி வந்தார்கள்

என்னால் தனித்து ஒன்றும் செய்ய முடியாது. எனது நி-லைமையும் அவர்களுக்கு விளங்கப் படுத்த முடியாது. நான் ஒன்றுமே பேசாது மௌனமாய் நின்றேன். ஒருவன் என்-னைப் பிடித்துத் தள்ளினான். என்னுடைய கஸ்ர காலம் என நினைத்துக் மெல்லென நகர்ந்து போனேன்.

எனக்கு நல்லா வேணும், இதுவும் வேணும் இதுக்கு மேலே-யும் வேணும் இப்படி ஒரு கஸ்ரத்தின் மத்தியிலா என் மாமா மாமிமாரோடு கதைக்க வேணும் நண்பர்களோடு உறவாட வேண்டும்...? அதுவும் ஒசிக் கோலில்....

மெல்லென ரெயின் பக்கம் நடந்து போனேன். என்ர கஸ்ர காலம் அடுத்து ரெயினும் இல்லை. யாரில் பிழித்தேனோ என நினைத்த வண்ணம் அங்கிருந்த வாங்கிலே அமர்ந்து கொண்டேன்.

"ரெலிபோன்"
"ரெலிபோன்"
"ரெலி போன்"

கண்டறியாத ரெலிபோன் எங்களில் என்னைப் போல எத்தனை பேருக்கு இந்த விளங்காத வியாதி இருக்கின்றது. ஏன் இப்படி ஓர் நிலை...? இந்த நாட்டு வாழ்க்கை சொர-

www.tamilarangam.net



களா...? பிரிந்து வாழுகின்றோம் என்ற தனிமை நிலையா? இல்லையேல் எமக்கு ஏற்படுகின்ற அவசரத் தேவைகளா?

எனக்குத் தெரிந்த எத்தனையோ நண்பர்கள் வீடு கிடைத்து பதிந்ததும் ஒன்று வருமுன்னே ரெலிபோன் வந்துவிடும். பின்பு காலப்போக்கில் காசில்லாததால் கட்பண்ணப்படும், இல்லையேல் கள்ளக் கோல்களின் ஆக்கினைகளால் கட்பண்ணப்படும்.

சில நண்பர்கள் வீட்டில் ரெலிபோன் இருந்தும் இல்லாத மாதிரி, ஒரு அந்தரத்துக்கும் ஆபத்துக்கும் தொடர்பு கொள்ள முடியாத இக்கட்டான நிலை. ஏன்... ஏன்...?

இந்த ரெலிபோன்களினால் குடும்பங்கள் பலவற்றில் பல குழப்பங்கள், குழப்படிகள்.

இதே ரெலிபோன்களால் எத்தனையோ உள்ளங்களுக்கு குதூகலங்கள் கும்மாளங்கள்..

ஆயிரம் இரண்டாயிரம் என எத்தனை ஆயிரங்களை கத்தை கத்தையாய் கட்டியிருப்போம் எத்தனையோ தொலைபேசிப் பெட்டிகளில் சில்லறைகளைத் தள்ளியிருப்போம்.

ஏன் இந்த நிலை? ஏன் இப்படி ஓர் தேவை?

விடை தெரியாத வினாக்கள் பல என் மனதில் வரிசை வரிசையாய் வந்து போனது. நினைத்துப் பார்க்கப் பார்க்க மண்டையே வெடித்து விடும் போல் தோன்றியது. அந்தக் கேள்விகளை மறக்க முடியாமல் நினைத்து நினைத்து அந்த ரெயின் வரும் வரை குழம்பிக் கொண்டிருக்கிறேன்.

- சிர்தும் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கு.போ. இல: 9ன் விடைகள்:

**இட-வலம்:**

1. 26: கும்பம்
2. 51: தப்புக்கணக்கு
3. 16: பருதி
4. 17: செப்பு
6. 19: கைப்பை
7. 46: வையகம்
22. 31: சுமை
32. 45: அடவி
32. 52: (—)
44. 48: புகை
50. 29: காப்பிலி

**மேல்-கீழ்:**


4. 1: செருக்கு
7. 6: வைகை
7. 13: வைப்புப்பணம்
14. 17: பதிப்பு
19. 20: பைய
25. 26: தும்
28. 29: கவி
33. 31: கடமை
33. 34: கவி
36. 39: குடும்பி
40. 42: அப்பு
44. 46: அம்பு
-48-: கை
50. 51: காக்கை

**பரிசுபெற்றோர்....**

① S. Ratnasingham.
Bredgade-39.
7600-Struer.

② T. Bavani
Bjergevænget-68.
St-Andst
6600-Vejen.

③ T. yogarasah
Eng holmvej-35 st.th
6880-Tarm





இவர்களுக்கும், போட்டியில் கலந்து கொண்டு ஆதரவு நல்கியோர்களுக்கும், "சஞ்சீவி" சார்பில் பாராட்டுகளும், நன்றிகளும் தெரிவிக்கிறேன். பரிசிலைப் பெற்றவர்கட்கான காசுக் கட்டளைகள் உரியகாலத்தில் அனுப்பிவைக்கப்படும்.

கு.எ.போட். சார்பாக: எம்பி.லோகா...

www.tamilarangam.net



# குறுக்கெழுத்துப் போட்டி :10



உங்கள் கருத்து:

அலுவலகப்பாவனைக்கு:

www.tamilarangam.net


»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro .

NR:10

afs.

www.tamilarangam.net

# 1990 FLYGTNINGE KUNSTNER

1990ம் ஆண்டுக்கான 'கலைஞராக' வசந்தகுமார்-திவாகேஸ்வரி அவர்கள் டெனிஸ் அகதிகள் சங்கத்தால் தெரிவு செய்யப்பட்டது நீங்கள் அறிந்திருப்பீர்கள். இம்முறை ஒரு தமிழர் தெரிவு செய்யப்பட்டது இங்கு வாழும் தமிழர்களாகிய எங்களுக்கு பெருமைப்படக்கூடிய விடயம். இதனை வாசகர்களாகிய உங்களுக்கு அறியத்தருவதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

-சஞ்சீவி-

---

"பெரிய மச்சாள்" என்ற வார்த்தையை தேவியின் வாயினால் மீண்டும் கேட்க மூர்த்தியின் மனம் பரவசப்பட்டது. தன்னையும் அறியாமல் அவளைத் தன்னுடன் அணைத்தான்.

"எதுக்காக என்னைக் கட்டிவாய்?" காதோரம் சிணுங்கினாள்.

"போங்கோ" நாணத்தால் அவள் முகம் சிவந்தது.

முற்றும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீடு.
தமிழ்-டெனிஸ் நட்புறவுச் சங்கம்.

"CHANCHIVE"
Tamilsk-Dansk Venskabsforening,
Postbox:1205,
7500 Holstebro.Danmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்